**தலைப்பு 118 – விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு - 2024**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 118 – விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 24 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

**1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அரச கணக்குகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரசாங்கக் கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் 7.6 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்றில் (ஏசீஏ-எப்) திருத்தப்பட்ட பாதீட்டு நிதியேற்பாட்டு நிரலில் வருடாந்த பாதீட்டு நிதியேற்பாடுகளுக்கு நிதிப்பிரமாணம் 66 மற்றும் 69 மாற்றல்கள் மற்றும் குறைநிரப்பு நிதியேற்பாடுகளில் சீராக்கப்பட்ட பின்னர் பெறுமதி பயன்படுத்த வேண்டியிருந்த போதிலும் நிதிச் செயலாற்றல் கூற்றில் திருத்தப்பட்ட பாதீட்டு நிதியேற்பாடாக நிதிப்பிரமாணம் 66 மற்றும் 69 மாற்றல்கள் மற்றும் குறைநிரப்பு நிதியேற்பாடு சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாமல் வருடாந்தப் பாதீட்டு நிதியேற்பாட்டின் பெறுமதி காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அரசாங்கக் கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்கக் கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் வருடாந்த பாதீட்டு நிதியேற்பாடுகளுக்கு நிதிப்பிரமாணத்தில் மாற்றல்கள் மற்றும் குறைநிரப்பு ஏற்பாடுகள் சீராக்கப்பட்ட பின்னர் பெறுமதி ஈடுபடுத்தப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### 1.6.2.1 வருமானப் பெறுவனவு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஏசீஏ – 1(i) படிவத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை வருமானம் தொடர்பான கூற்றில் 2022 ஆம் ஆண்டில் சரியான தேறிய வருமானப் பெறுமதியான ரூபா | ஏற்றுக் கொள்கின்றோம். ஏசீஏ-1(i) இன் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை வருமானம் தொடர்பான கூற்றில் 2022 ஆம் ஆண்டில் சரியான தேறிய வருமானப் பெறுமதியான ரூபா 219,195,182 | வருமானக் கூற்றில் சரியான பெறுமதி உள்ளடக்குதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 219,195,182 தொகை ரூபா 437,085,714 ஆக குறிப்பிடப்பட்டமையால் ஏற்பட்ட தவறு 2024 ஆம் ஆண்டின் போதும் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தவறினால் ரூபா 437,085,714 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த தவறை சரி செய்தல் தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | |

**1.6.2.2 மூலதன செலவினம்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | அமைச்சிற்குரிய உரிமைத்தன்மையுடன் காணப்படுகின்ற அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்ற கூட்டுமொத்தமான ரூபா 59,820,513 பெறுமதியான 09 வாகனங்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 08 வாகனங்கள் அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் நிதியல்லாச் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | விவசாய அமைச்சின் சிகாஸ் CIGAS முறைமைக்கு வாகனத்தை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரித்தை தீர்த்து சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |
| (ஆ) | திறைசேரி பிரதி செயலாளரின் 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய இலக்கம் 2/2017 என்ற சொத்துக்கள் முகாமைத்து சுற்றறிக்கையின் பிரகாரம் ஏனைய அமைச்சுக்கு வாகனங்களைக் கையளிக்கும் போது கையளிப்பவர் அமைச்சின் பெயரில் பதிவு செய்து கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு இல்லாமல் விவசாய அமைச்சின் கீழ் பதிவு ஏனைய அமைச்சு மற்றும் திணைக்களத்தால் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 59,450,000 பெறுமதியான 15 வாகனங்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 07 வாகனங்கள் இந்த அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வாகனம் தொடர்பான காரணங்களைக் கண்டறிந்து தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும். | உரித்தை தீர்த்து வைத்து சொத்துக்களின் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | பதிவு உரித்து இன்றி பயன்படுத்தப்படுகின்ற வாகனங்கள், பதிவு உரித்துள்ள நிறுவனத்தின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தமது நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்வதற்கோ அல்லது பதிவு உரித்தை நிறுவனத்திற்கு முறையான பிரகாரம் கையளிப்பதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய இலக்கம் 2/2017 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் கையளிப்பதற்கோ அல்லது மீண்டும் கையேற்பதற்கோ நடவடிக்கை எடுக்காமல் ஏனைய நிறுவனங்களில் சட்ட ரீதியான உரிமைத் தன்மையின் கீழ் | 18 வாகனங்கள் பெருந்தோட்டத் துறைக்குரிய வாகனங்கள் ஆகும். மிகுதி 11 வாகனங்கள் பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி மற்றும் வீடு சார்ந்த கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச் செய்கை மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் தற்போது விவசாய அமைச்சின் கீழ் அந்த வாகனங்களை பதிவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | பதிவு உரித்துள்ள சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களிலும், கணனி முறைமையிலும் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விவசாய அமைச்சில் பயன்படுத்தப்பட்ட ரூபா 276,450,000 பெறுமதியான 29 வாகனங்கள் CIGAS கணனி முறைமையிலும் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களும் ஆக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஈ) | அமைச்சில் பயன்படுத்தப்படுகின்ற 80 வாகனங்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பீட்டுப் பெறுமதியாக கணக்காய்விற்கு சமர்க்கப்பட்ட பெறுமதி மற்றும் CIGAS கணனி முறைமையில் உள்ளடக்கப்பட்ட வாகனங்களின் பெறுமதிகளில் ரூபா 23,459,410 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | விவசாய அமைச்சுக்குரிய 06 வாகனங்கள் தொடர்பாக மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அந்த அறிக்கை கிடைத்தவுடன் CIGAS கணனி முறைமையில் உள்ளடக்கப்படும். கால்நடை வள பிரிவிற்குரிய வாகனங்கள் தொடர்பாக வாகனங்கள் பெறுமதியாக சில வாகனங்களின் கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதி அல்லது அந்த சந்தர்ப்பத்தின் போது சில வாகனங்களின் காப்புறுதி பெறுமதி காண்பிக்கப் பட்டுள்ளது. 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய வாகனங்களின் மதிப்பீட்டுப் பெறுமதியாக சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 04/2018 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் கொம்ரோலர் ஜெனரால் இற்கு நிதியல்லா சொத்துக்கள் அறிக்கையிடும் வகையில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 06/2023 ஏற்பாடுகளின் பிரகாரம் அரசாங்கத்தின் நிதியல்லாச் சொத்துக்கள் முகாமைத்துவ முறைமையில் (NFMS) உள்ளடக்குவதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ஆகும். அதன் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பீட்டுப் பெறுமதியாக கணக்காய்வுக்கு சமர்பிக்கப்பட்ட பெறுமதி மற்றும் CIGAS கணனி முறைமையில் உள்ளடக்கப்பட்ட வாகனங்களின் பெறுமதிகளுக்கும் வேறுபாடுகள் காணப்படுவதை ஏற்றுக்கொள்கின்றோம். | வாகனங்களின் சரியான பெறுமதி கணனி முறைமையில் உள்ளடக்குதல் வேண்டும். |

(உ) முன்னாள் விவாசய இராஜாங்க அமைச்சருக்கு ஒதுக்கப்பட்டிருந்த உர பிரிவிற்குரிய ரூபா 18,000,000 பெறுமதியான இலக்கம் KW-8202 என்ற வாகனம் 2021 மார்ச் 21 ஆந் திகதி ஏற்பட்ட விபத்திற்காக ரூபா 7,500,000 காப்புறுதி இழப்பீடு செலுத்துவதற்கு காப்புறுதி செய்யப்பட்ட நிறுவனத்துடன் இணங்கி அதன் பிரகாரம் வாகனத்தைப் பழுது பார்ப்பதற்கு 2022 திசெம்பர் 12 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது. 2023 மார்ச் 23 ஆந் திகதி ரூபா 5,625,000 தொகை வாகன பழுதுபார்த்தல் நிறுவனத்திற்கு காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 21 ஆந் திகதி மற்றும் 2024 செப்தெம்பர் 27 ஆந் திகதி கணக்காய்வினால் பௌதீக ரீதியில் அவதானிக்கும் போது மற்றும் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் 02 வருடங்கள் கடந்திருந்த போதும் உரிய பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இலக்கம் KW-8202 என்ற வாகனம் பத்தரமுல்லை கராஜ் இற்கு பழுதுபார்த்தலுக்கு 2022.12.12 ஆந் திகதி அனுப்பப்பட்ட போதும் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் அந்த பழுதுபார்த்தல் பூர்த்தி செய்து கையளிக்கப்பட்டிருக்க வில்லை. 2024.04.04 ஆந் திகதி அதன் செயல் முன்னேற்றத்தை விசாரணை செய்த போது அந்த நிறுவனத்தால் 2024.04.06 ஆந் திகதி முதல் 90 நாட்களுக்குள் பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவித்து அதன் பிரகாரம் 2024.07.30 ஆந் திகதி வாகனத்தின் பழுது பார்த்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்து 2024.08.15 ஆந் திகதியில் வழங்குமாறு அமைச்சு அந்த கராஜ் இற்கு அறிவித்திருந்தது. எனினும் 2024.08.15 ஆந் திகதி வாகனம் கையளிக்கப்படாது இருந்தமையால் 2024.09.06 ஆந் திகதி சிரேஸ்ட உதவி செயலாளர் நிர்வாகம் 1 மற்றும் உதவி செயலாளர் (போக்குவரத்து) இனால் கராஜ் இற்கு சென்று வாகனத்தை பௌதீக ரீதியில் பரீட்சித்த போது அந்த கராஜ் இனால் 2024.10.23 ஆந் திகதிய கடிதம் மூலம் உரிய உதிரிப்பாகங்கள் உள்நாட்டு சந்தையில் காணப்படாமையின் காரணமாக தாய் கம்பனியில் இருந்து இறக்குமதி செய்து பழுது பார்த்து மீண்டும் கையளிப்பதற்கு 03 மாத காலம் கோரப்பட்டிருந்தது. அந்த வாகனத்தின் பழுது பார்த்தல் நடவடிக்கைகள் தொடர்பாக பரீட்சித்து அறிக்கை ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இயந்திரப் பொறியியலாளருக்கு 2025.01.01 ஆந் திகதி எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டது. மீண்டும் இந்த பழுது பார்த்தல் தொடர்பாக 2025.03.11 ஆந் திகதி மேலதிக செயலாளர் (போக்குவரத்து மற்றும் விசாரணை) தலைமையில் மற்றும் உதவி செயலாளர் (போக்குவரத்து) மற்றும் இயந்திரப் பொறியிலாளர் மற்றும் உரிய கராஜ் இன் முகாமையாளரின்

பழுதுபார்த்தல் மேற்கொண்டு வாகனத்தை பயன்படுத்துதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | பங்கு பற்றலுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் பிரகாரம் அந்த மோட்டர்ஸ் இன் Workshop Manager இனால் 2025.03.11 ஆந் திகதியில் இருந்து 02 மாதங்களில் பழுது பார்த்தல் நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. எனினும் 2025.04.12 ஆந் திகதிய கடிதம் மூலம் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக மேலும் இரண்டு மாத காலம் தேவையாக இருந்ததாக அந்த மோட்டர்ஸ் இனால் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த வாகனத்தின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் தொடர்பாக பரீட்சித்து அறிக்கை ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இயந்திரப் பொறியிலாளருக்கு 2025.05.19 ஆந் திகதி எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஊ) | முன்னாள் பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி மற்றும் வீட்டுத்தோட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டு இதுவரையில் கிராமிய பொருளாதாரப் பிரிவிற்குரிய பெறுமதி ரூபா 43,000,000 ஆன றேஞ்ச் றோவர் வண்டி 2021 யூன் 21 ஆந் திகதி இந்த வாகனம் இயந்திரம் அதிக ரீதியில் சூடாகிதன் காரணமாக ஏற்பட்ட குறைபாட்டிற்காக பழுதுபார்ப்பதற்கு அனுப்பப்பட்டிருந்தது. எனினும் இந்த வழுக்கள் தொடர்பாக மோட்டார் வாகன தொழில்நுட்பம் தொடர்பாக சுயாதீன அரச நிறுவனத்திலிருந்து அறிக்கையினைப் பெற்றுக் கொள்ளாமல் அரசாங்கத்தின் முகவர் நிறுவனத்திலேயே அந்த வழுக்கள் தொடர்பான அறிக்கை பெறப்பட்டிருந்தது. நிதிப்பிரமாணம் 104 இன் கீழ் பரிசோதனைகள் நடாத்துவதற்கு 02 வருடங்களை கடந்த பின்னரே நியமிக்கப்பட்டிருந்தது. நிதிப்பிரமாணம் 104(3) இன் பிரகாரம் முழுமையான அறிக்கை அல்லது ஆரம்ப அறிக்கை இதுவரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2021.06.23 ஆந் திகதி பழுதுபார்ப்பதற்கு சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 3,076,877 ஆரம்ப மதிப்பீட்டில் நிறைவேற்றுவதற்கு முடியுமாக இருந்த | வாகனத்தின் பழுதுகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தின் அமைச்சின் வாகனங்களை பழுதுபார்த்தல் தொடர்பாக நடவடிக்கை எடுத்த தபால் திணைக்களத்தின் பட்டய இயந்திரப் பொறியியலாளரின் ஆலோசனையின் பிரகாரம் இந்த பழுதுகளுக்கு உரிய உள்நாட்டு முகவருக்கு வினாக்கொத்து ஒன்று சமர்ப்பித்து பதில் ஒன்று பெற்ற பின்னர் மேலும் விரிவான விளக்கமளித்தல் உள்நாட்டு முகவரிடம் இருந்து பெறப்பட்டிருந்தது.<br><br>இந்த வாகனம் வெளி விபத்தின் (accident) காரணமாக ஏற்பட்ட இழப்பின் போது வாகனத்திற்கு காப்புறுதி மேவுகை உரித்து கிடைத்திருந்தது. தொழில்நுட்ப காரணங்களின் அடிப்படையில் வாகனத்தின் எஞ்சினில் ஏற்பட்ட உள்ளக ரீதியான இழப்பு காப்புறுதியில் மேவுகை செய்யப்படவில்லை.<br><br>பழுதுகள் தொடர்பாக உள்நாட்டு முகவர் கம்பனி விடயங்களை காண்பித்தமை மற்றும் வாகனத்தின் சாரதி மற்றும் | வாகனத்தின் பழுதுகளுக்கு உரிய குறித்துரைத்த காரணம் மற்றும் அதற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்காண்பதற்கும், விரைவாக பழுது பார்த்தலை மேற்கொண்டு ஓட்டத்திற்காக ஈடுபடுத்துவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

பழுதுபார்த்தல்கள் 02 வருடங்களும் 05 மாதங்களும் கடந்திருந்த பின்னர் அந்த நிறுவனத்தால் பெறப்பட்ட ரூபா 9,041,001 ஆரம்ப மதிப்பீட்டில் பழுதுபார்ப்பதற்காக அனுப்பப்பட்டிருந்தது. பழுதுபார்த்தல் பூர்த்தி செய்யப்படாதிருக்கும் போது 2023.12.30 அந் திகதி ரூபா 9,041,001 காசோலை எழுதி காசேட்டில் உரிய பதிவுகளை மேற்கொண்டு பின்னர் அந்தக் காசோலையின் பெறுமதி அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் அதற்கு முன்னர் அந்த பணிகளுக்காக மீண்டும் 2024.07.15 ஆந் திகதிய கொடுப்பனவு உறுதிச்சீட்டு செலுத்துவதற்காக தயாரிக்கப்பட்டிருந்தது. மேலும் 2024.07.22 ஆந் திகதி வரையில் இந்த மோட்டார் வாகனத்தின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் உரிய கொடுப்பனவுகளை மேற்கொண்டு வாகனத்தை மீண்டும் கையேற்பதற்கும் மற்றும் அதன் ஓட்ட பரிசோதனையினை மேற்கொள்வதற்கும் கணக்காய்வுத் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

வாகனத்தில் பிரயாணம் செய்த அமைச்சரின் பாதுகாப்பு பிரிவின் உத்தியோகத்தரின் கூற்றுக்களை கவனத்தில் கொண்டு அது தொடர்பாக வழங்கப்பட்ட அறிக்கையில் பழுதுகளுக்காக பொறுப்பு வாய்ந்த நபர் ஒருவர் அல்லது தரப்பினர் தொடர்பாக இறுதி தீர்மானத்திற்கு வந்திருக்க வில்லை. எனினும் இது தொடர்பாக நியமிக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 104(4) இயந்திரப் பொறியியலாளரை உள்ளடக்கிய இறுதி பரிசோதனைக் குழு உள்நாட்டு முகவர் நிறுவனத்திற்கு சென்று தொழில்நுட்ப உத்தியோகத்தரை சந்தித்து மேலும் விடயங்கள் பரீட்சிப்பதன் மூலம் இந்த எஞ்சினுக்கு ஏற்பட்ட இழப்பிற்கு வாகனத்தின் சாரதி குற்றவாளியாக தீர்மானிக்கப்பட்டு பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

வாகனம் பழுது பார்ப்பதற்காக விபத்து ஏற்பட்ட 2021 ஆம் ஆண்டு முதல் அவ்வப்போது 05 மதிப்பீடுகள் அளவில் பெறப்பட்டிருந்த போதும் செலவினத் தலைப்புக்களில் போதியளவான நிதியேற்பாடு காணப்படாமையின் அடிப்படையில் பழுதுபார்த்தல் மேற்கொள்ள முடியாது இருந்தது. 2023 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டின் போது திறைசேரியில் இருந்து நிதியேற்பாடு பெறப்பட்டதன் பின்னர் பழுதுபார்ப்பதற்கு உரிய நாளது வரையாக்கப்பட்ட மதிப்பீடு ஒன்றை பெற்று மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.
பழுது பார்த்தல் 2024 ஆம் ஆண்டின் யூலை மாதம் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் அமைச்சின் இயந்திரப் பொறியியலாளரால் ஓட்ட பரிசோதனை மேற்கொண்டு 2024.07.19 ஆந் திகதி வழங்கப்பட்ட பழுது பார்த்தலுக்கு உரிய பரிந்துரையின் அடிப்படையில் கிராமியப் பொருளாதார பிரிவின் நிர்வாக பிரிவினால் (போக்குவரத்து அலகு) அங்கீகரிக்கப்பட்ட உறுதிச் சீட்டு கணக்கு பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| | பணிகளைப் பூர்த்தி செய்து நியாயமான காலத்தில் செலுத்துவதற்கு அமைச்சு தவறியிருந்தது.<br>அரசாங்க செலவின முகாமைத்துவம் தொடர்பான சீஏ/1/17/1 மற்றும் 2010.05.14 ஆந் திகதிய சனாதிபதி அலுவலக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சர் பதவிக் காலத்தில் இருக்கும் வரை அல்லது அமைச்சர் அவரின் சாரதியாக ஏதோ ஒரு நபரின் சேவையை பெற்றுக் கொள்வதற்கு விருப்பம் தெரிவித்தல் முடிவடையும் வரை என்ற இரண்டில் முதலாவது ஏற்படுகின்ற திகதி வரை தற்காலிக அடிப்படையில் கௌரவ அமைச்சரின் பிரத்தியேக பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார். | |

## 2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட இந்த அறிக்கையின் 4.10.4.8(ஈ) மற்றும் 1.6.2.2(ஊ) பந்திகளுக்குரிய பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| முன்னர் காணப்பட்ட அரசாங்கத்தின் உரக் கம்பனியான வ/ப லங்கா உர கம்பனி மற்றும் வ/ப கொழும்பு வர்த்தக உரக் கம்பனியால் 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது இறக்குமதி செய்யப்பட்ட உரத்திற்கான நாணயக் கடிதம் காலவதியாகின்ற சந்தர்ப்பத்தின் போது உரிய வழங்குனருக்கு செலுத்துவதற்குத் தேவையான பணம் அந்த சந்தர்ப்பத்தின் போது திறைசேரியில் இருந்து கிடைக்காமையின் அடிப்படையில் குறுங்காலக் கடன் மூலம் தீர்க்கப்பட்ட | நாணயக் கடிதம் காலாவதியாகும் போது ஏற்படுகின்ற செலவினம் உரிய வங்கிக்கு தீர்த்து வைத்தல் உரக் கம்பனிக்கு உரிய பொறுப்பாகும். வழங்குனர்களின் பட்டியல்களைத் தீர்ப்பதற்கு அரச உரக் கம்பனி நெல்லுக்காக உர மானியம் கொள்வனவு செய்யும் போது விவசாயிகளிடம் இருந்து அறவிடப்பட்ட தொகையின் அளவு அல்லாது இருந்தமையினால் உர விலை தீர்மானிக்கும் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் | உரத்தை இறக்குமதி செய்யும் போது செலவிட வேண்டிய தொகையை தீர்த்து வைப்பதற்கும், கடனுக்கு பெற்றுக் கொள்ளல் தொடர்பாக முறையான மேற்பார்வை ஒன்று அமைச்சினால் மேற்கொள்ளப்படல் |

கூட்டுப் பெறுமதி ரூபா 43,742,559,911 தொகை 05 கட்டங்களின் கீழ் ஆக கூட்டுப்பெறுமதி ரூபா 47,465,632,771 கால கடனாக்கப்பட்டு வங்கியினால் மாற்றப்பட்டு அந்தக் கடன் தொகையைத் தீர்ப்பதற்கு 2024 ஆம் ஆண்டின் போது அமைச்சினால் ரூபா 3,401,114,581 வட்டி செலவினம் ஒன்று செய்யப்பட்டிருந்தது.

உரங்களின் சந்தை பெறுமதி கணிப்பிடப்பட்டு நெல்லுக்காக உர மானியம் கொள்வனவு செய்யப்பட்டிருக்கும் போது விவசாயிகளிடம் இருந்து அறவிடப்பட்ட தொகையை கழித்து மிகுதி தொகையை அமைச்சின் கோரிக்கையின் அடிப்படையில் கம்பனிக்கு நாணயக் கடிதம் காலாவதியாகின்ற திகதியில் செலுத்துவதற்காக திறைசேரியினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கம்பனி பெறப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் அமைச்சினால் உரநாணயக் கடிதம் காலாவதியாகின்ற திகதியில் வழங்குனருக்கு செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட தொகையினைப் பெற்றுக் கொள்வதற்கு திறைசேரியில் இருந்து நிதி கிடைக்காமையினால் அரச உரகம்பயினால் மக்கள் வங்கியில் இருந்து பெறப்பட்ட குறுகிய கால கடன் தொகையின் மூலம் காலாவதியாகின்ற வழங்குனரின் பட்டியல்களை குறித்த திகதியில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

2019 இன் பாதீட்டின் மூலம் வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாடு போதியளவில் இல்லாமையின் காரணமாக அதன் பட்டியல்களை தீர்ப்பதற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஒன்றிணைந்த அமைச்சரவைக் குறிப்பிற்காக 20/0293/204/022 மற்றும் 2020.02.05 ஆந் திகதி வழங்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் காலாவதியாகின்ற நாணயக் கடிதங்களுக்காக மக்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய குறுகிய காலக் கடன் பணங்களின் கூட்டுமொத்தம் மற்றும் அந்த குறுங்கால கடன் தொகை நீண்ட காலக் கடனாக மாற்றப்படும் போது ஏற்படுகின்ற காலத்திற்கு உரிய வட்டி 05 கட்டங்களின் கீழ் கால ரீதியான கடனாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் விவசாய அமைச்சின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாகும்.

வேண்டும்.

## 3.2 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருமானக் குறியீட்டு இலக்கம் 2003.07.00 இன் கீழ் வருகின்ற அரசாங்கத்தின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய 2024 ஆம் ஆண்டின் வருமான மதிப்பீடு ரூபா 390,000,000 ஆக இருந்த போதிலும் ஏசீஏ-1 படிவத்தின் பிரகாரம் ஆண்டின் வருமான சேகரித்தல் ரூபா 86,430,015 ஆகும். அதன் பிரகாரம் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வருமான சேகரித்தலின் செயல் முன்னேற்றம் 22 சதவீதமான ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | 2024 ஆம் ஆண்டிற்காக அமைச்சு வருமானம் மதிப்பீடு ரூபா 100 மில்லியன் ஆக இருந்த போதிலும் அது திறைசேரியால் ரூபா 390 மில்லியன் ஆக திருத்தப்பட்டிருந்தது. சீரற்ற காலநிலைமையின் அடிப்படையில் உற்பத்தி வீழ்ச்சி அடைந்ததன் பிரகாரம் மற்றும் 2022/2023 பெரும் போகத்திற்காக குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இலவசமாக நெல் பகிர்ந்தளிக்கப்பட்ட பின்னர் எஞ்சியிருந்த இருப்பு விற்பனையின் அடிப்படையில் அந்த வருமானம் மாத்திரம் 2003.07.00 என்ற அரசாங்கத்தின் வருமானத் தலைப்பில் செலவு வைக்கப்பட்டுள்ளது. மேலும் நிலுவை வருமானம் அறவிட வேண்டிய சகல மாவட்ட செயலகங்களுக்கும் அறிவித்து அதன் பிரகாரம் பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2024 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட ரூபா 86,430,015 பெறுமதியில் ரூபா 13,738,768 தொகை 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையில் காணப்பட்ட நிலுவை வருமானம் ஆன ரூபா 376,678,134 மீதியில் உள்ளடக்கப்பட்ட 2018/2019 பெரும்போகம், 2020/2021 பெரும்போகம் மற்றும் 2021 சிறு போகத்திற்குரிய நிலுவை மீதிகளுக்காக கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் நெல் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு உரியதாகக் காணப்படுகின்ற நிலுவை வருமானத்தை சேகரிக்கும் செயல் முன்னேற்றம் 3.5 சதவீதமான மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் நிதிப்பிரமாணம் 127(1)(ஆ), நிதிப்பிரமாணம் 127(6), நிதிப்பிரமாணம் 128(1)(ஏ) மற்றும் நிதிப்பிரமாணம் 128(2) தொடர்பில் கவனம் செலத்த வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நெல் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித் திட்டம் 2018/19 பெரும் போகம் 2020/21 பெரும் போகம், 2021 சிறு போகத்திற்கு உரிய நிலுவை மீதி அறவிடுவதற்காக வருமானத் தலைப்பான 2003.07.00 செலவு வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு சகல மாவட்ட செயலாளர்களுக்கும் அமைச்சின் உரிய பிரிவிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கணக்கு பிரிவின் தகவல்களின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு உரியதாக கிடைக்கப்பெற்ற ரூபா 86,430,015 பெறுமதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 73,330,179 தொகை 2022/2023 பெரும்போகத்திற்கு உரிய 04 மாவட்டங்களில் இருந்து அதாவது அம்பாறை, திருகோணமலை, அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை என்ற மாவட்டங்களில் இருந்து கிடைக்கப் பெற்றமை விடயங்களில் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டில் ஏசீஏ-1(i) - நிலுவை வருமானம் தொடர்பான கூற்றின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் பின்னர் நிலுவை வருமான மீதியை வெளிப்படுத்தாமையினால் கணக்காய்வில் அந்தப் பெறுமதி தொடர்பாக உறுதிப்படுத்த முடியவில்லை. | 2022/23 பெரும் போகத்திற்கு உரிய விளைச்சல் 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் பின்னர் அந்த அறிக்கை இடப்படுகின்ற 2023 ஆம் ஆண்டின் நிலுவை வருமான மீதியை வெளிப்படுத்துவது இல்லை. இந்த அறவிடப்பட்ட நிலுவை வருமானம் முன்னைய போகத்திற்கு உரியதாகும். | நிலுவை வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) | அமைச்சின் விவசாயப் பிரிவின் மூலம் நிதிப் பிரமாணம் 128(2)(ஈ) நிதிப்பிரமாணம் 176(1) மற்றும் 2015 யூலை 20 ஆந் திகதிய இலக்கம் 01/2015 அரச நிதி கொள்கை சுற்றறிக்கையின் 08 ஆம் பந்தியின் பிரகாரம் இலக்கம் 2003-07-00 என்ற வருமானக் குறியீட்டின் கீழ் 2024 ஆம் ஆண்டிற்குரிய அரை ஆண்டு நிலுவை வருமான அறிக்கையின் பிரதி எதுவும் அந்த கால எல்லை முடிவடைந்து ஒரு மாத காலத்திற்குள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டிற்காக 2003.07.00 அரசாங்கத்தின் நெல் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு உரிய வருடாந்த நிலுவை வருமான அறிக்கை தயாரித்து அரச நிதிக் கொள்கை பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் இருந்து நிதிப்பிரமாணம் 176(1) இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு குறிப்பிட்டுக் கொள்கின்றோம். | நிலுவை வருமான அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**3.3 செலவின முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செலவினத் தலைப்பு 240 மூலம் 05 சந்தர்ப்பங்களின் போது ஒதுக்கப்பட்ட குறைநிரப்பு மதிப்பீட்டு நிதியேற்பாட்டில் 11 சதவீதம் முதல் 44 சதவீதம் வரையிலான வீச்சு வரை சேமிக்கப்பட்டமை, தேவையினை விஞ்சி நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | நிதியேற்பாடு சேமிக்கப்பட்டமைக்கு தாக்கமளித்த காரணங்களாக அமைச்சரவை அமைச்சு பதவியணியினர் இருக்காமல், செலுத்துவதற்கு உள்ள பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படாமை, எதிர்பார்க்கப்பட்டதாக நெல் கொள்வனவு செய்ய முடியாமை, சட்ட ரீதியான காரணங்களின் அடிப்படையில் செலுத்துதல் நிறுத்தப்பட்டமை மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு சேமிக்கப்பட்டமை இதற்கான காரணம் ஆகும். | சரியான வருமான மதிப்பீடு தயாரித்து நிதியேற்பாடுகள் ஒதுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அமைச்சினால் நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் ஆரம்ப வருடாந்த மதிப்பீடு நிதியேற்பாடு ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றுதல் 11 சந்தர்ப்பங்களின் போது மேற்கொள்ளப்பட்ட போதும் அந்த மாற்றல்களில் பின்னரும் உரிய செலவின விடயங்களின் நிதியேற்பாடு 11 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையிலான வீச்சு வரை நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | அமைச்சினால் நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் ஆரம்ப வருடாந்த மதிப்பீட்டு நிதியேற்பாடு ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்த போதும் செலவின முகாமைத்துவம் செய்தல், Zoom தொழில்நுட்பம் ஊடாக கூட்டங்களை நடாத்தியதால் பிரயாண செலவினங்கள் சேமிக்கப்பட்டமை, வட்டி விகிதம் உயர்வடைந்து சென்றதன் காரணமாக கடன் வட்டி கோரிக்கை இடப்படாமையினால் சபை பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படாமை இந்த சேமிப்புக்கு காரணமாக இருந்தது. | செலவின விடயங்களுக்காக நிதியேற்பாடு மாற்றும் போது பகுப்பாய்வு ரீதியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | அமைச்சினால் நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் 12 சந்தர்ப்பங்களின் போது ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்ட நிதியேற்பாடுகளில் 03 சதவீதம் முதல் 44 சதவீதம் வரை நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | அமைச்சு பதவியணியினர் காணப்படாமை, எரிபொருள் விலை வீழ்ச்சியடைந்தமை மற்றும் கித்துள் அபிவிருத்தி சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு போதியளவில் இல்லாமையின் அடிப்படையில் மாற்றப்பட்டதன் காரணமாக சேமிப்பு ஏற்பட்டிருந்தது. | செலவின விடயங்களுக்காக நிதியேற்பாடு மாற்றும் போது பகுப்பாய்வு ரீதியில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | நிதிப்பிரமாணம் 50(ii) பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு இயலுமானவரை முழுமையாகவும் சரியாகவும் தயாரிக்க வேண்டியிருந்ததுடன் நிதிப்பிரமாணம் 50(iii) பிரிவின் பிரகாரம் சிக்கனமாகவும் செயற்திறனாகவும் தொடர்பாக உரிய கவனத்துடன் மதிப்பீடு வழங்கல் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அதற்கு மேலதிகமாக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலமும் மற்றும் நிதிப்பிரமாணம் 66 மாற்றல்களின் மூலமும் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | விவசாயப் பிரிவின் 05 செலவின விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 683,986,275 மற்றும் 02 செலவின விடங்களுக்காக நிதிப்பிரமாணம் 66 மாற்றல்களின் மூலம் ரூபா 19,056,609 நிதியேற்பாடு மாற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அமைச்சு நிதியேற்பாட்டை மாற்றுவதற்கும், சேமிப்பிற்கான காரணங்களாக பெரும் போகத்தில் நெல் கொள்வனவு செய்யும் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் மேற்கொள்ளப்படாமை, விவசாய அமைச்சின் நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்தின் பணிப் பொறுப்பாக சம்பளம் செலுத்துவதற்காக மாற்றுதல் மற்றும் மதிப்பீட்டுத் திணைக்களம் பட்டியல்களை பரீட்சிக்காமையின் காரணமாக கொடுப்பனவு செய்யப்படவில்லை. | ஏனைய செலவின விடயங்களுக்காக நிதியேற்பாடுகளை மாற்றும் போது பகுப்பாய்வு ரீதியில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | பெருந்தோட்ட கைத்தொழில் பிரிவினால் இரண்டு செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதியேற்பாடு ரூபா 180,000,000 இற்கு மேலதிகமாக ரூபா 77,865,000 மேலதிக நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அது 43 சதவீதமாக இருந்தது. | 118-1-28-0-1003 செலவின விடயம்- 2024.01.10 ஆந் திகதிய 03/2024 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் அதிகரித்த வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் 2024.06.27 ஆந் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கை 18/2015(v) அரசாங்க சேவையின் நிறைவேற்று சேவை உத்தியோகத்தர்களுக்கு விசேட படி செலுத்துவதற்கு குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் நிதியேற்பாடு பெறப்பட்டுள்ளதாக அந்த அமைச்சினால் அறிக்கையிடப்பட்டுள்ளது. 118-1-28-0-01403 செலவின விடயம் - மின்சார பட்டியலின் விலைத் தளம்பல்களினால் நிதியேற்பாடு குறைவடைந்தமையால் நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் நிதியேற்பாடு மாற்றப்பட்டுள்ளதாக இந்த அமைச்சின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. | மேலதிக நிதியேற்பாடுகளைப் பெற்றுக் கொள்ளும் போது சிக்கனமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | பெருந்தோட்ட கைத்தொழில் பிரிவின் வருடாந்தப் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் நிதியேற்பாடு ஒதுக்கப்படாத 03 செலவின விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 40,391,799 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் உள்ளடக்கப்பட்ட ஒரு செலவின விடயத்திற்காக நிதிப்பிரமாணம் 66 மாற்றல்களின் கீழும் ரூபா 11,868,200 நிதியேற்பாடு மாற்றப்பட்டிருந்தது. | வெளிநாட்டு மானியங்களுக்கு வருடாந்த மதிப்பீட்டின் மூலம் நிதி ஒதுக்கப்படாது இருந்ததுடன் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் மூன்று சந்தர்ப்பங்களின் போது நிதியேற்பாடு பெறப்பட்டிருந்தது. விவசாய அமைச்சின் நவீன மயப்படுத்தல் செயற்திட்டத்தின் 118-2-29-009-2509(17) செலவின விடயத்திற்காக அரசாங்க உத்தியோகத்தர்களின் சம்பளம் செலுத்துவதற்கு வெளிநாட்டு நிதியீட்டம் சார்ந்த கிரயத்தின் கீழ் 2024 இன் பாதீட்டின் மூலம் நிதியேற்பாடு ஒதுக்கப்படாது இருந்தமையால் நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் நிதியேற்பாடு மாற்றப்பட்டிருந்தது. | ஏனைய செலவின விடயங்களுக்காக நிதியேற்பாட்டை மாற்றிக் கொள்ளும் போது சிக்கனமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டில் 03 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2,100,000 கூட்டுத்தொகையான தேறிய ஏற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டதுடன் மேலும் மீண்டெழும் செலவின விடயங்கள் 10 இற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 107,400,000 கூட்டுத்தொகையான தேறிய நிதியேற்பாடுகளில் ரூபா 58,017,085 அதாவது 48 சதவீதம் முதல் 88 சதவீதம் வரையிலான அளவு சேமிக்கப்பட்டிருந்தது. | பாதீட்டு சுற்றறிக்கை 01/2024 இன் பிரகாரம் அரச செலவின முகாமைத்துவம் செய்தல் மற்றும் கட்டிட நிர்மாணம், இயந்திரங்கள் போன்றவற்றை கொள்வனவு செய்தல் வரையறுக்கப்பட்டதன் காரணமாக மூலதன செலவின விடயங்களின் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | நிதியேற்பாட்டை பயன்படுத்தும் போது சிக்கனமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் 02 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2,500,000 கூட்டுத்தொகையான தேறிய நிதியேற்பாடுகள் முழுமையாக சேமிக்கப்பட்டதுடன் மேலும் 04 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 13,500,000 கூட்டுத்தொகையான தேறிய நிதியேற்பாடுகளில் ரூபா 10,172,258 அதாவது 40 சதவீதம் முதல் 89 சதவீதம் வரையிலான அளவு சேமிக்கப்பட்டிருந்தது. | பாதீட்டு சுற்றறிக்கை 01/2024 இன் பிரகாரம் அரச செலவின முகாமைத்துவம் செய்தல் மற்றும் கட்டிட நிர்மாணம், இயந்திரங்கள் போன்றவற்றை கொள்வனவு செய்தல் வரையறுக்கப்பட்டதன் காரணமாக மூலதன செலவின விடயங்களின் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | நிதியேற்பாட்டை பயன்படுத்தும் போது சிக்கனமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | அசேதன உரம் இறக்குமதி தடை செல்லுபடியான 2021 எப்ரல் 27 இல் உள்ளவாறு உரக் கம்பனிக்கு சொந்தமாக எஞ்சியிருந்த மாணிய உர இருப்பு அந்த தடை செய்யப்பட்டு அகற்றப்பட்ட 2021 நவம்பர் 30 வரை விற்பனை செய்யப்பட்ட முறை மற்றும் அவை விற்பனை செய்யப்பட்ட விலைகள் தொடர்பாகவும் மாணியத் தொகை கோரப்பட்டிருந்த தனியார் உரக்கம்பனி 08 இனை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்களின் பிரகாரம் மாணிய உரத் திட்டத்தில் முன்மையான நோக்கமாக விவசாயிகளுக்கு ரூபா 1,500 சலுகை விலையின் கீழ் 50 kg உரம் மூட்டை ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்குவதாக இருந்த போதும் அவ்வாறு இறக்குமதி செய்து நேரடியாக உரம் பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்ற பல்வேறு | ஒவ்வொரு பயிர்ச் செய்கைகளுக்காகவும் உற்பத்தி சார்ந்த நியம விகிதங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கலவை உரம் சந்தையில் விநியோகிக்கும் போது அதற்காக உரக் கம்பனியால் செயற்பாட்டுக் கிரயம் செலவிடப் படுகின்றமையால் கலக்கப்பட்ட கிலோ கிராம் 50 உரம் மூட்டை ஒன்று அதிக விலைக்கு சந்தையில் விநியோகிப்பதற்காக கம்பனிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.<br><br>எனினும் இரசாயனப் பசளை இறக்குமதித் தடை அமுல்படுத்தப்பட்ட 2021 ஏப்ரல் 27 ஆந் திகதி முதல் அந்த தடை நீக்கப்பட்டு 2021 நவம்பர் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் ரூபா 1,500 ஆகக் கூடிய விலையினை விஞ்சி சில கம்பனியினால் அதிக விலையில் உரம் விற்பனை செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வு ஐயவினாவின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. மேலும் ரூபா 1,500 உதவி விலையின் கீழ் கம்பனியால் உழைக்கப்பட வேண்டிய வருமானம் மற்றும் உரம் அதிக விலையில் விற்பனை செய்வதன் மூலம் | ரூபா 1500 மானிய விலையின் கீழ் கம்பனியால் உழைக்கப்பட வேண்டியிருந்த வருமானம் மற்றும் உரம் அதிக விலையில் விற்பனை செய்வதன் மூலம் கம்பனியால் உள்ளபடியாக உழைக்கப்பட்ட வருமானங்களின் மொத்த வருமானங்களுக்கு இடையே வேறுபாடுகளைக குறைத்து அரசாங்கத்தால் செலுத்த வேண்டிய மானிய |

| | | | |
|---|---|---|---|
| | கலவை உர வகைகள் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட மேற்கூறப்பட்ட கம்பனியினால் மிகவும் அதிக விலையின் கீழ் சந்தையில் விற்பனை செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு அதிக விலையின் கீழ் கலவை உரம் விற்பனை செய்வதற்கு காரணமாக அதற்காக பயன்படுத்தப்பட்ட சில மூலப் பொருட்கள் அதிக விலையில் காணப்பட்டதாக விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான விலை அதிகமான கலவை உர வகைகள் தயாரிப்பதற்காக மானிய திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட நேரடியான உர வகைகள் பயன்படுத்துதல மற்றும் அந்த உரம் மாணிய விலையினை விட உயர்ந்த விலையில் விற்பனை செய்தமை தொடர்பாக தேசிய உர செயலகத்தால் எடுக்கப்பட்ட எந்த ஒரு நடவடிக்கையும் கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை. | கம்பனியால் உள்ள படியாக உழைக்கப்பட்ட மொத்த வருமானத்திற்கு இடையிலான வேறுபாடுகள் குறைத்து அரசாங்கத்தால் செலுத்த வேண்டிய மானியத் தொகையைக் கணிப்பிட்டு செலுத்துவதற்காக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத் தருகின்றோம்.<br><br>அசேதன உர இறக்குமதி தடை நீக்கப்பட்ட 2021.11.30 இல் உள்ளவாறு கம்பனிக்குச் சொந்தமாக மிகுதியாக இருந்த அசேதன உர இருப்பு பட்டயம் பெற்ற கணக்காய்வு நிறுவனத்தின் மூலம் மெய்மையாய்வு மேற்கொண்டு அந்த இருப்பு மாணிய திட்ட முறையில் இருந்து அகற்றப்பட்டதுடன் 2021.11.30 ஆந் திகதியின் பின்னர் நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் உர இறக்குமதி செய்யும் போது ஏற்பட்டிருந்த கஸ்டங்களின் காரணமாக உர விலைகள் விரைவாக உயர்வடைந்து சென்றது. கலப்பு உரத்தை தயாரிப்பதற்காக மேலும் கலப்பு உர வகைகள் (விசேடமாக MOP போன்ற உர வகைகள்) மீண்டும் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. அதன் போது டொலர் உயர்வடைந்து சென்றமை, இறக்குமதி சார்ந்த கம்பனிகளுக்கு நாணயக் கடிதம் (LC) திறக்கும் போது அதிக வரையறைக்கு உட்பட்டதுடன் உரத்தை இறக்குமதி செய்தல் மிகவும் வரையறுக்கப்பட்டிருந்தது. அதனால் எஞ்சியிருந்த உரத்துடன் கூடிய விலையின் கீழ் புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட பசளையினை ஈடுபடுத்தி கலப்பு உரம் தயாரித்தல் மற்றும் பொதியிடல் (bag cost) போன்ற ஏனைய செலவினங்கள் அதிகரித்துச் சென்றமையால் அந்த காலத்தின் போது நாட்டில் எரிபொருள் விலை கணிசமாக உயர்வடைந்து சென்ற விடயங்களினால் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்ற கலப்பு உரங்களின் விலை கணிசமான அளவில் கணிசமானதாக உயர்வடைந்து சென்றமை அறிக்கையிடப்பட்டிருந்தது. | தொகையைக் கணிப்பிட்டு செலுத்துதல் வேண்டும். |
| (ஏ) | மானிய விலையில் உரத்தை வழங்குவதன் அடிப்படையில் கம்பனிகளுக்கு ஏற்படுகின்ற நட்டத்தைக் கணிப்பிடும் போது உரிய இறக்குமதி உர வகையின் பயன்பாடு மற்றும் அந்த உரம் விற்பனை செய்யப்பட்டுள்ள | காணப்பட்ட மானிய கொள்கையின் பிரகாரம் மாணியத் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படுகின்ற உர இருப்பிற்காக செலுத்தும் போது அடிப்படையாக கொள்ளப்பட்ட உரிய உர இருப்பில் இறக்குமதி தொடர்பான தகவல்களின் அடிப்படையில் ஆகும். | மானிய விலையில் உரத்தை வழங்குவதன் அடிப்படையில் உழைக்கப்பட வேண்டிய |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளபடியான விலையை உறுதிப்படுத்தாமல் அந்த உர இருப்பின் மொத்த அளவும் மானிய விலையில் விற்பனை செய்யப்பட்டதாகக் கருதி வணிக விலை மற்றும் மானிய விலைகளுக்கு இடையிலான வேறுபாடுகள் உரிய இருப்பின் மொத்த அளவிற்காகவும் கணிப்பிடல் மற்றும் அந்த கொடுப்பனவுகளை உறுதிப்படுத்தவதற்கு நடவடிக்கை எடுத்தல் நிதிப்பிரமாணம் 138 இற்கு முரணாக இருந்தமை மற்றும் அவ்வாறு கணிப்பிடப்பட்டு செலுத்தப்பட்டமை சிக்கனமற்ற செலவினம் செய்யப்பட்டதாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | (இறக்குமதி செய்யப்பட்ட உரத்தின் அளவு, இறக்குமதி விலை, இறக்குமதி செய்யப்பட்ட திகதி மற்றும் அந்த திகதிக்கு உரிய அந்நிய செலாவாணி விகிதம்) மானியம் செலுத்துவதற்காக கோவைகள் உர இருப்பு இறக்குமதி செய்து 06 மாதங்களுக்கு பின்னரே தயாரிக்கப்படுகின்றது. அதனால் 2018.04.06 ஆந் திகதி முதல் அதாவது உர மானியத் திட்டம் ஆரம்பத்தில் இருந்து கம்பனியால் இறக்குமதி செய்யப்பட்ட உர இருப்பிற்காக 06 மாதங்கள் கழிவதற்கு முன் செலுத்தப்படவில்லை. எனினும் உர இருப்பிற்கு உரிய செலுத்துதல்கள் மேற்கொள்வதற்கு முன் இந்த உரத்தை பகிர்ந்தளிக்கப்பட்ட முறை தொடர்பாக உரம் பகிர்ந்தளித்தல் அறிக்கை மற்றும் விற்பனை உறுதிப்படுத்தும் கடிதம் (Distrubation Plan sales conformation letter) உர இருப்பிற்கு உரிய சகல கடித கோவைகளும் கம்பனியால் உள்ளடக்குதல் வேண்டும். காணப்பட்ட மானியக் கொள்கையை அமுல்படுத்தும் முறையின் பிரகாரம் சந்தையில் மானிய விலையின் கீழ் உரம் விற்பனை செய்யப்படுவதுடன் உரம் பயன்படுத்தபடுகின்ற முறை தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளுக்காக மானியத் திட்டமுறைமை ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருமானம் மற்றும் கம்பனியால் உள்ளபடியாக உழைக்கப்பட்ட மொத்த வருமானங்களுக்கு இடையிலான வேறுபாடுகளைக குறைத்து அரசாங்கத்தால் செலுத்த வேண்டிய மானியத் தொகையைக் கணிப்பிட்டு செலுத்துதல் வேண்டும். |
| (ஐ) | 2021 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் இறக்குமதி செய்த 2021 செப்தெம்பர் 23 இல் இந்த நாட்டிற்குக் கொண்டு வந்து ஆய்வுகூட அறிக்கை தோல்வியடைந்ததன் காரணமாக மீண்டும் திருப்பி அனுப்பப்பட்ட சேதன உரம் மெட்ரிக் தொன் 96,000 இற்காக முற்பணக் காப்புறுதி ஒன்று (Advance Guarantee) பெற்றுக் கொள்ளாமல் ரூபா 1,382,720,494 உரிய வெளிநாட்டு உர வழங்குனருக்கு செலுத்தியதால் இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நிதி ரீதியான நட்டம் தொடர்பாக 2022 ஆகஸ்ட் 26 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் விநியோகிக்கப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கையின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு | ‘சீன சேதன உரம் வழங்கும் கம்பனி மற்றும் அரசாங்கத்தின் உரக் கம்பனி இரண்டிற்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட ‘‘நீதிமன்றத் தீர்ப்பை அமுல்படுத்தும் போது எழுந்திருந்த பிரச்சனைகளை தீர்த்து வைத்தல்’ என்ற வகையில் 2022 ஆகஸ்ட் 12 ஆந் திகதி அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டதுடன் இந்த பிரச்சனைகள் சிக்கலான இணக்கப்பாட்டில் இரண்டு தடவைகளில் தீர்த்துக் கொள்வதற்கான முன்மொழிவு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்குமாறு வெளிநாட்டு அமைச்சரிடம் கோரிக்கை இட்டு மேற்கூறப்பட்ட விஞ்ஞாபனத்திற்காக 2022 செப்தெம்பர் 13 ஆந் திகதி அமைச்சரவைத் தீர்மானம் வழங்கியிருந்தது. அதன் பிரகாரம் இந்த சேதனப் பசளை இறக்குமதி செய்யும் செயற்பாடுகள் இதுவரை முடிவடைந்திருக்கவில்லை. | வழங்குனருக்கு செலுத்தப்பட்ட பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பரிந்துரைகள் எதுவும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | |

### 3.4 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி மற்றும் பொதுத் திறைசேரியின் அறிக்கையின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதிகளுக்கு இடையே முறையே ரூபா 4,618,804 மற்றும் ரூபா 1,697,296 வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டது. | விவசாயத் திணைக்களத்தால் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்ட கடப்பாடுகள் CIGAS இல் தரவேற்றம் செய்யப்பட்ட போது திணைக்களத்தினாலும் மீண்டும் CIGAS இல் அந்த கடப்பாடுகள் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ரூபா 4,618,804 இனால் இரட்டைக் கணிப்பீட்டுக்கு உட்பட்டிருந்தது.<br>மாவட்ட செயலகங்களினால் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக்கள் CIGAS இல் தரவேற்றம் செய்யும் போது மாவட்ட அலுவலகத்தினாலும் மீண்டும் CIGAS இல் அந்த பொறுப்புக்கள் தரவேற்றம் செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 4,813 இனால் இரட்டைக் கணிப்பீட்டுக்கு உட்பட்டு ரூபா 1,692,482 பொறுப்புக்களின் பெறுமதி அமைச்சின் கணக்குப் பிரிவில் அறிக்கையிடப்படாமல் CIGAS இல் தரவேற்றம் செய்யப்பட்டிருந்தது. | சகல கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் சரியாகக் கண்டறிந்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |
| (ஆ) | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் விவசாயப் பிரிவினால் ரூபா 2,302,666 தொகையும், கால்நடை பிரிவினால் ரூபா 20,637 மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் பிரிவில் ரூபா 45,074 ஆன கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும் உரிய கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் கடப்பாடுகள் பொறுப்பில் உள்ளடக்க முடியுமாகக் காணப்படுகின்ற நிதியேற்பாட்டின் அளவின் அடிப்படையில் மாத்திரம் ஆனமையால் ரூபா 1,934,380 இற்குரிய சேமிப்பு பெறுமதியான ரூபா 1,659,642 நிதிக்கூற்றில் கடப்பாடுகள் பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கின்ற சந்தரப்பத்தில் போக்குவரத்து பிரிவில் இருந்து கிடைத்த பொருட் பதிவேட்டின் பிரகாரம் பொறுப்பு பெறுமதியாக ரூபா 316,064 பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும் அதற்குரிய உறுதிச்சீட்டுக்கள் பெப்ரவரி மாதமே | சகல கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கி பொருட் பதிவேட்டில் உள்ளடக்குதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கிடைத்திருந்ததுடன் அப் பெறுமதி ரூபா 291,412 ஆக மாற்றப்பட்டிருந்தது. மிகுதி ரூபா 76,873 பெறுமதி எதிர்காலத்தில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் சரியாகக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>கால்நடை வள பிரிவில் கணக்குப் பிரிவினால் பொருட் பதிவேடு 2025.01.22 ஆந் திகதியே தயாரிக்கப்பட்டதுடன் உறுதிச்சீட்டுகள் கணக்குகள் பிரிவிற்கு அதன் பின்னைய திகதியிலே கிடைத்திருந்தது. ரூபா 41,025.00 பெறுமதியான இலக்கம் 16/02/2025 உறுதிச்சீட்டுக்கள் பொது வைப்புக் கணக்கிற்கு உரிய கொடுப்பனவாகும். 2025.02.11 ஆந் திகதி அதற்குரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 08/02/2025 உறுதிச்சிட்டின் பெறுமதி ரூபா 17,160.00 ஆகும். அது பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்டத் துறையின் பொறுப்புக்கள் குறித்துரைத்த அடிப்படையில் குறிப்பிடப்படாமை எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. | |

### 3.5 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான பிரகாரம் குறித்துரைத்த கால எல்லையில் சகல கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளிக்கப்படுகின்றமையை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராலும், கணக்கீட்டு உத்தியோகத்தராலும் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அறிக்கையின் 4.10 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில் எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்துரைத்த கால எல்லையில் சகல கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளித்தல் வேண்டும். |

### 3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **பெறுமதி ரூபா** | **இணங்காமைகள்** | | |
| 2024 திசெம்பர் 18 ஆந் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 05/2024 மற்றும் கொம்ட்ரோலர் ஜனராலின் 2024 மே 20 ஆந் திகதிய இலக்கம் CGO/NFAMS/01/03 என்ற கடிதம் | | விற்றுத் தீர்ப்பதற்காக இனங்காணப்பட்ட 07 வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | KS-6781, KO-0024, KW-8202 மற்றும் CAV-5064 ஆம் இலக்க வாகனம் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை 05/2024 என்ற அதி சொகுசு வாகனம் அகற்றுதலின் கீழ் அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்ட வாகனம் ஆகும். KM-5207 என்ற வாகனம் அரச நிதி சுற்றறிக்கையின் 01/2020 இன் பிரகாரம் வருடாந்தம் மேற்கொள்ள வேண்டிய வாகன அகற்றல் செயற்பாடுகளின் பிரகாரம் கேள்வி கோருவதற்காக பெறுகைப் பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.<br><br>CAB-3288 மற்றும் PC-4812 தற்போது பெருந்தோட்ட அமைச்சு இந்த அமைச்சின் விடயப் பரப்பில் இல்லை. | உரிய வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.7 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி செயலாளரின் 2022 திசெம்பர் 21 ஆந் திகதிய BDKBP/01/01/03-2023 என்ற பாதீட்டு சுற்றறிக்கையின் 18 ஆவது பிரிவின் பிரகாரம் கலைக்கப்பட்டுள்ள செலவின விடயங்களுக்கு உரிய செயலிழந்த உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கட்டுநிதிக் கணக்குகளை மூடும் பணிகளின் பொறுப்புக்கள் கலைக்கப்பட்ட அமைச்சுக்களில் சேவையாற்றிய பிரதான நிதி உத்தியோகத்தர் / பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் 2022 | முன்னர் காணப்பட்ட இராஜாங்க அமைச்சு தற்போது விவசாய கால்நடை வள, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டமையால் அதன் பிரகாரம் வங்கிக் கணக்கின் பெயரை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கலைக்கப்பட்ட அமைச்சுக்களின் வங்கிக் கணக்குகளை மூடுவதற்கோ அல்லது பொருத்தமான நடவடிக்கையோ எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் ஆண்டின் போது கலைக்கப்பட்ட இராஜாங்க அமைச்சுக்குரிய இலங்கை வங்கியின் கணக்கு இலக்கம் 7040184 என்ற ரூபா 5,620,828 மீதி ஒன்று உள்ளடக்கப்பட்ட வங்கிக் கணக்கு கணக்காய்வுத் திகதி வரையிலும் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது இருந்ததுடன், கலைக்கப்பட்ட இராஜாங்க அமைச்சின் செயலாளரின் பெயரில் தொடர்ந்தும் பேணிச் செல்லப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | செயலாளர், விவசாய, கிராமிய பொருளாதார அலுவல்கள் மற்றும் கால் நடை வள அமைச்சின் பெயரில் இலங்கை வங்கியின் காணப்படுகின்ற இலக்கம் 7040507 என்ற செயல் இழந்த வங்கிக் கணக்குத் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாது இருந்ததுடன் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் அந்த வங்கிக் கணக்கை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சுக்கள் அவ்வப்போது மாற்றமடைந்தமையால் செயலிழந்து காணப்பட்ட இந்த கணக்குகளை பரிசோதனை செய்து மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயலிழந்த வங்கிக் கணக்குகளை தாமதம் இன்றி மூடுவதற்கு நடவடிக்கை எடுத்து அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் அடையப்பெறாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் கால்நடை வள பிரிவின் மூலம் அநுராதபுர மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகள் கல்வி பயிலுகின்ற 20 பாடசாலைகள் தெரிவு செய்து பின்னைகளின் போசனை மட்டத்தைக் கட்டியெழும்பம் நோக்கில் ஒரு பாடசாலையில் 10 பெற்றோர்களுக்காக ஒரு மாத வயதுள்ள 10 கோழிக் குஞ்சுகள் வீதம் வழங்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 2 மில்லியன் ஒதுக்கி அதன் மூலம் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்பட்ட கோழிக் கூடுகளின் எண்ணிக்கை 200 ஆகும். மீளாய்வாண்டில் இறுதியில் பௌதீக செயல் முன்னேற்றம் 100 வீதம் காண்பிக்கப்பட்ட போதிலும் நலனாளிகளின் 166 பேர்களுக்காக மாத்திரம் கோழிக் குஞ்சுகள் | ஆரம்ப திட்டம் தயாரிக்கும் போது ஒரு மாத விலங்கின் பெறுமதி ரூபா 1,000 ஆக கருதி திட்டம் தயாரிக்கப்பட்ட போது திசெம்பர் மாதம் வரையில் அதன் பெறுமதி ரூபா 1,200 வரை அதிகரித்து இருந்தது. அதன் பிரகாரம் 02 மில்லியன் தொகையில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த ஒரு குடும்பத்துக்கு உரிய 10 கால்நடைகள் வீதம் 166 குடும்பங்களுக்கு மாத்திரமாகும். இந்த நிகழ்ச்சித் திட்டச் செயற்பாடுகள் வடமத்திய மாகாண அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டதுடன் பராமரிப்பு செலவினங்கள் நலனாளிகளால் ஏற்கப்படல் வேண்டும். வடமத்திய மாகாணத்தின் செயற்திட்டத்தை அமுல்படுத்தும் திட்டத்தின் பிரகாரம் இந்த செயல் திட்டம் அமுல்படுத்தப்படுவதுடன் அதன் போது கால்நடைகள் வழங்கி ஒரு வாரத்திற்குள் மரணமடையுமாயின் | செயற்திட்ட செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு தொடர்பான தகவல்கள் செயற்திட்ட முன்மொழிவில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. மேலும் செயற்திட்டத்தை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் செயற்திட்ட செயற்பாடுகள் மற்றும் பராமரித்தல் ஆபத்தான நிலைமைக்கு முகங்கொடுக்கின்ற விதம் தொடர்பான தகவல்கள் செயற்திட்ட முன்மொழிவில் உள்ளெடுக்கப்படவில்லை. | அதற்குப் பதிலாக கால்நடைகள் மீண்டும் வழங்கப்படுகின்றது. மேலும் ஒரு மாதம் செல்லும் வரை பராமரிக்கப்பட்ட கால்நடைகள் வழங்கப்படுகின்றமையால் மரணமடையும் ஆபத்து மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | |
| (ஆ) | அமைச்சின் கால்நடைவளப் பிரிவின் மூலம் இனப்பெருக்க பண்ணைகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் திறப்பணையில் கால்நடைப் பண்ணையில் ஆடுகள் இனப்பெருக்க அலகை ஸ்தாபித்தல், சஹிவால் இனப்பெருக்க அலகை ஸ்தாபித்தல் மற்றும் வடமத்திய மாகாணத்தில் விவசாய சேவையினை வலுப்படுத்துவதற்காக ரூபா 23 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. திறப்பணையில் கால்நடைப் பண்ணையில் ஆடு இனப்பெருக்க அலகை ஸ்தாபிப்பதற்காக ரூபா 03 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்ட போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கால்நடைகளைக் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. சஹிவால் இனப்பெருக்க அலகை ஸ்தாபிப்பதற்காக ரூபா 10 மில்லியன் மொத்த நிதியேற்பாடு அளவு வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் பௌதீக செயல் முன்னேற்றம் 50 சாவீதமான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 10 மில்லியன் மொத்த நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் பௌதீக செயல் முன்னேற்றம் 40 சதவீதமான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. மேலும் இனப்பெருக்க பண்ணைகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் வடமத்திய மாகாணத்தில் நிக்கவெரட்டி பிரதேசத்தில் வன்னிகம பண்ணையில் ஆடு இனப்பெருக்க அலகை ஸ்தாபித்தல் மற்றும் | திறப்பனை பண்ணையில் ஆடு இனப்பெருக்க பிரிவு ஒன்றை ஸ்தாபிப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடான ரூபா 3,090,000 (நிர்வாக செலவினத்துடன்) மற்றும் ஆடு இனப்பெருக்க அலகு ஒன்றை ஸ்தாபிப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடான ரூபா 10,300,000 (நிர்வாக செலவினதுடன்) 2024.12.03 ஆந் திகதி வடமத்திய மாகாண பிரதம செயலகத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. அந்த நிதியேற்பாடு தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக வடமத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களப் பணிப்பாளர் 2025.03.04 ஆந் திகதி கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>செயற்கை கருவூட்டல் கருவிகளைக் கொள்வனவு செய்வதற்காக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்கு ரூபா 10 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 3.8 மில்லியன் செலவில் செயற்கை கருவூட்டல் கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மிகுதி ரூபா 6.2 மில்லியனைப் பயன்படுத்தி மீண்டும் செயற்கை கருவூட்டல் கருவிகள் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட போது கூறுவிலைகள் கோரி கொள்வனவு செய்வதற்கான காலம் போதியளவில் காணப்படாதிருந்ததாக அறிவித்து 2024.12.18 ஆந் திகதி சேமிக்கப்பட்ட நிதியேற்பாடு மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டது. வன்னிகம பண்ணையில் ஆடு இனப்பெருக்க பிரிவை ஸ்தாபிப்பதற்குரிய அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு மற்றும் ஆட்டுக் கொட்டகைகள் திட்டம் மீண்டும் திருத்த வேண்டியிருந்தமையும் அந்த திருத்தப்பட்ட மதிப்பீடு மற்றும் | செயற் திட்டங்களைத் திட்டமிடுவதற்கும் எதிர்பார்க்கப்பட்ட பணிகளின் அடைவு மட்டத்தை அடைந்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| இனப்பெருக்கத்திற்காக கால்நடைகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 7.5 மில்லியன் நிதியேற்பாடு மற்றும் தென்மாகாணத்தில் மாத்தறை கெக்குனதுர பண்ணையில் ஆடு இனப்பெருக்க அலகை ஸ்தாபித்தல் இனப்பெருக்க ஆடுகளைக் கொள்வனவு செய்தல், கால்நடை உணவுக்காக புல் மரங்களை வளர்த்தல் மற்றும் உபகரங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 5.25 மில்லியனும் நிதியேற்பாடு வழங்கி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்தப் பண்ணைகள் இரண்டிலும் செயற்திட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தவறியிருந்தது. அதன் பிரகாரம் இனப்பெருக்க பண்ணைகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் உள்ள மேற்குறிப்பிட்ட செயற்திட்டங்களின் பௌதீக செயல் முன்னேற்றம் ஒட்டுமொத்தமாக 24 சதவீதமான குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. | ஆட்டு கொட்டகைத் திட்டங்களை பெற்றுக் கொள்ளல் தாமதம் அடைந்ததன் காரணமாக செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்ததாக வடமேல் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களப் பணிப்பாளரால் 2024.11.28 ஆந் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது.<br><br>குகுணதுர பயிற்சி நிலையத்தில் ஆடு இனப்பெருக்கப் பிரிவு ஒன்றை ஸ்தாபிப்பதற்காக ரூபா 5.25 மில்லியன் தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் முற்பணம் வழங்கும் தாமதத்தின் காரணமாக மாகாண குறித்துரைத்த நிதியேற்பாட்டின் மூலம் மேற்கொள்ளப்பட்டதாக தென் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்கள பணிப்பாளரால் 2024.12.09 ஆந் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 4.2 எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் (Outcome) பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது வேலை ஆரம்பிக்கப்பட்டு 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் முறையே ரூபா 279.8 மில்லியன், ரூபா 304 மில்லியன் மற்றும் ரூபா 191 மில்லியன் செலவிட்டு மட்டக்களப்பு, வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் விசேட பொருளாதார நிலையங்களை நிர்மாணித்தல் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் இந்த அறிக்கை திகதி வரையிலும் அந்த பொருளாதார நிலையங்களைத் திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பொருளாதார நிலையங்களின் முகாமைத்துவ பொறுப்பிற்காக உரிய அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனினும் தற்போது இலக்கம் 2403/53 என்ற 2024.09.27 ஆந் திகதிய விசேட வர்த்தமானியின் மூலம் விசேட பொருளாதார நிலையங்களின் பணிப் பொறுப்புக்கள் வியாபாரம், வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு, கூட்டுறவு அபிவிருத்தி, கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. உரிய அமைச்சு இன்னும் இந்த விசேட பொருளாதார நிலையம் ஆரம்பிக்காதிருந்தாக அறிவித்துள்ளது. | பொருளாதார நிலையங்கள் விரைவாக திறக்கப்படல் வேண்டும். |

4.3 செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் கால்நடை வள பிரிவின் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வள அபிவிருத்தி (உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி) செயற்திட்டத்தின் கீழ் கோழிப் பண்ணைகளை அபிவிருத்தி செய்யும் செயற்பாடுகளின் கீழ் ஆகக் குறைந்த கிரயத்தில் உயர் தரத்தில் உள்ள கோழிக் குஞ்சுகள் மற்றும் கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியை கட்டியொழுப்புதல் மற்றும் சூரியகல வலு சக்தியைப் பயன்படுத்துவதன் மூலம் எரிபொருளுக்காக செலவாகின்ற கிரயத்தை குறைக்கும் நோக்கில் அமுல்படுத்தப்படுகின்ற யாழ்ப்பாணம் அச்சுவேலி பாற்பண்ணையில் சூரிய கலங்களை ஸ்தாபிக்கும் செயற்திட்டத்திற்காக 2024 ஆம் ஆண்டில் ரூபா 05 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தை திட்டமிடல் நலிவான மட்டத்தில் காணப்பட்டமையும் செயற்திட்டத்தின் செயற்திறன் மற்றும் வினைத்திறனாக அமுல்படுத்தப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | 2024.02.28 ஆந் திகதி உரிய செயற்திட்ட அறிக்கை மற்றும் BOQ அமைச்சுக்கு அனுப்புமாறு வடமத்திய மாகாண பணிப்பாளருக்கு அறிவித்து அது தாமதிக்கப்பட்டு 2024.05.29 ஆந் திகதி மாகாண பணிப்பாளரால் அமைச்சுக்கு செயற்திட்ட அறிக்கை அனுப்பப்பட்டிருந்தது. 2024.05.30 ஆந் திகதி கட்டிடத் திணைக்களத்தின் மின்சார பொறியியலாளரால் வழங்கப்பட்ட செலவின மதிப்பீடு அமைச்சுக்கு அனுப்பி 2024.07.04 ஆந் திகதி அந்த மதிப்பீட்டுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மாகாண நிர்வாகத்தால் செயற்திட்டம் 2024 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யுமாறு மாகாண பணிப்பாளருக்கு அறிவித்து அந்த செயற்திட்டம் மாகாணப் பணிப்பாளரால் 2024.12.25 வரையிலும் அந்த செயற்திட்டத்தை மேற்கொண்டு பூர்த்தி செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அது தொடர்பாக எழுத்து மூல ஆவணங்கள் காணப்படாமையினால் 2024.12.19 ஆந் திகதி அமைச்சினால் மாகாணப் பணிப்பாளரிடம் இருந்து செயற்திட்டம் தொடர்பாக விசாரணையில் உள்ளதுடன் அத்தினம் மாகாண சபைப் பணிப்பாளரால் 2024.12.24 ஆந் திகதி அந்த செயற்திட்டத்தை மேற்கொள்ளாது இருந்ததாக அமைச்சுக்கு விடயங்களுடன் மாகாணப் பணிப்பாளரால் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டில் இந்த செயற்திட்டம் பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. | சாத்தியவள ஆய்வை மேற்கொண்டு எதிர்பார்க்கப்பட்ட பணிகளை வெற்றிகரமான மட்டத்தில் அடைந்து கொள்ளக் கூடிய செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | அமைச்சின் கால்நடை வளப் பிரிவின் மூலம் 2024 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பால் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் சகல மாகாணங்களையும் மேவுகை செய்யும் | இதற்கு சமமான தரவு முறை ஒன்று கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் "Geo Goviya" பெயரில் ஆசிய அபிவிருத்தி வங்கியில் ''உணவு | சாத்தியவள ஆய்வை மேற்கொண்டு எதிர்பார்த்த பணிகளை |

வகையில் கால்நடை வளத்துறை தொடர்பாக தரவுகளை சேகரிக்கும் முறைமை ஒன்றை ஸ்தாபிப்பதற்கும், பால் உற்பத்தி அலகை ஸ்தாபிப்பதற்கும் ரூபா 48.52 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்படவில்லை.

பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் அவசர உதவி'' செயற்திட்டத்தின் நிதி உதவியின் அடிப்படையில் ஸ்தாபிப்பதற்கு முன்மொழியப்பட்டதாக தேசிய திட்டமிடல் திணைக்களத்தால் அனுப்பப்பட்ட 2024.07.17 ஆந் திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் கால்நடை வளப் பிரிவிற்குரிய முறைமையும் இந்த முறைமையில் ஒன்றிணைத்து அந்த செயற்திட்டத்தின் கீழும் ஸ்தாபிக்குமாறு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மூலம் முன்மொழியப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் இந்த இரண்டு முறைமைகளையும் ஒன்றிணைத்து அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் "Geo Goviya" செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு போதியளவில் இல்லாமையின் காரணமாக அதற்காக மேலதிக நிதியேற்பாடாக கால்நடை வளப்பிரிவினால் ஒதுக்கப்பட்ட ரூபா 48.52 மில்லியன் நிதியேற்பாட்டை பயன்படுத்துவதற்கு முன்மொழியப் பட்டிருந்தது. எனினும் நிதியாண்டின் இறுதி வரையும் மேலதிக நிதியேற்பாடுகளின் தேவை தொடர்பாக கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் எங்களிடம் கோரப்படாது இருந்ததுடன் கால்நடை வள துறையில் தொடர்பான தகவல்களை சேகரிக்கும் முறைமை மற்றும் பால் உற்பத்தி அலகை ஸ்தாபிக்கும் செயற்திட்டத்தை அமுல்படுத்த முடியாதிருந்ததாகவும், அந்த நிதியேற்பாடு தேவையான மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவித்து இந்த அமைச்சின் திட்டமிடல் பிரிவின் பணிப்பாளர் நாயகத்திற்கு 2024.11.04 ஆந் திகதி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அவ்வாறே ஒதுக்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டை மீண்டும் கையேற்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வெற்றிகரமான மட்டத்தில் அடைந்து கொள்ளக் கூடிய செயற்திட்டம் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (இ) | அமைச்சின் கிராமிய பொருளாதாரப் பிரிவின் மூலம் தோட்டத்தில் ஆடுகளை வளர்க்கும் செயற்திட்டத்திற்காக 2023 ஆம் ஆண்டில் ரூபா 150 மில்லியனும், 2024 ஆம் ஆண்டில் ரூபா 200 மில்லியனுமாக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டதுடன் அதில் ரூபா 33 மில்லியன் நிதியேற்பாடு அதாவது 16 சதவீதமான அளவு அம்பாந்தோட்டை மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் அமுல்படுத்தப்படுகின்ற 21 மாவட்டங்களுக்கு இடையே ஒரு மாவட்டத்திற்காக உரித்தாகின்ற ஆகக் கூடிய நிதி ஏற்பாடு அந்த மாவட்டத்திற்கு உரிதாகியிருந்த போதிலும் அம்பாந்தோட்டை மாவட்ட செயலாளரால் அனுப்பப்பட்ட 2024.10.30 ஆந் திகதிய இலக்கம் DSH/DAD/06/27-1 ஆம் இலக்க கடிதம் மூலம் கூறுவிலை கோரும் போது நோயற்ற தரமான ஆடுகளைக் கொள்வனவு செய்வதற்கு தகைமை பெற்ற வழங்குனர் அண்மைய பிரதேசங்களில் கண்டறிவதற்கு முடியாமை, 2023 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ஆடுகள் தொடர்பான பிரச்சினைகள் எழுந்தமை, பல்வேறு காரணங்களின் அடிப்படையில் மரணமடைந்தமை மற்றும் நோய்க்கு உட்பட்டு சிகிச்சை அளிப்பதற்கு மற்றும் மரணமடையும் போது மரணப் பரிசோதனைகளை நடாத்துவதற்கும் நலனாளிகளுக்கு அதிக செலவினத்தை செய்ய வேண்டியிருந்ததன் காரணமாக பிரதேச செயலக மட்டத்தில் செயற்திட்டம் அமுல்படுத்த முடியாதிருந்ததாக அறிவித்து அந்த ரூபா 33 மில்லியன் நிதி ஏற்பாடுகளில் ரூபா 29,911,500 நிதி ஏற்பாடு மீண்டும் விவசாய அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தின் ஆகக் கூடிய நிதியேற்பாடு ஒதுக்கப்பட்ட மாவட்டத்தில் செயற்திட்டம் அமுல்படுத்தாமையின் காரணமாக மாவட்டங்களுக்கு இடையே நிதியேற்பாடு ஒதுக்குகின்ற முறை மற்றும் புதிய பிரதேசங்களைத் தெரிவு செய்கின்ற முறை தொடர்பாக முறையான திட்டம் இன்றி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | இந்த செயற்திட்டத்தின் கீழ் மாவட்டங்களுக்கு நிதியேற்பாடு ஒதுக்கும் போது விசேட முன்னுரிமை, கால்நடை வளர்ப்பில் அதிகரிக்கும் போக்கு காணப்படுகின்ற பிரதேசம், புவியியல் அமைவிடம், பொருத்தமான பிரதேசம், குறைந்த வருமானம் பெறுகின்ற கிராமிய மக்கள் அதிகமாக வாழ்கின்ற பிரதேசம் மற்றும் கௌரவ அமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சரினால் வழங்கப்பட்ட ஆலோசனைகளையும் பின்பற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள வறுமையான மாவட்டங்களுக்கு இடையே அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கு மிகவும் கூடிய முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் குறைந்த வருமானம் பெறும் மாவட்டமாக பிரதேசத்தில் தேவையினைக் கருதி 2023 ஆம் ஆண்டிற்காக ரூபா 18 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. 2023.12.31 இல் உள்ளவாறு இந்த செயற்திட்டத்திற்கான மாவட்ட அறிக்கையின் படி அறிக்கையில் செயல் முன்னேற்றத்தின் பிரகாரம் 233 நலனாளிகளுக்காக 699 ஆடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செலவிடப்பட்ட தொகை ரூபா 17.096 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் முறையே பௌதீக செயல் முன்னேற்றம் மற்றும் நிதிசார் செயல்முன்னேற்றம் 100 சதவீதம் மற்றும் 95 சதவீதம் ஆக மாவட்ட செயலகத்தில் இருந்து e-mail மூலம் வழங்கப்பட்ட செயல் முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் 2024 ஆம் ஆண்டிற்கான நிதியேற்பாடு ஒதுக்கும் போது கடந்த வருடங்களில் வெற்றிகரமாக செயற்திட்டத்தை அமுல்படுத்தப்பட்ட மாவட்டங்களுக்காக அதிக கவனம் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட விடயங்களைக் கவனத்தில் கொண்டு அம்பாந்தோட்டை மாவட்டத்திற்காக 2024.03.12 ஆந் திகதிய 2024 ஆம் நிதியேற்பாடுகளில் ரூபா 33 | முறையான செயற்திட்டம் ஒன்று தயாரித்து அதனை மேற்பார்வை செய்து எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. மேலும் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் வசதியீனமாகக் காண்பித்து மாவட்ட செயலாளரின் இலக்கம் DSH/DAD/06/27-1 மற்றும் முறையே 2024.10.30 மற்றும் 2024.12.26 ஆந் திகதிய கடிதங்கள் மூலம் ரூபா 29,911,500 மற்றும் ரூபா 2,815,200 நிதியேற்பாடு மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. மேலும் 2024 ஆம் ஆண்டில் செயற்திட்டத்தை அமுல்படுத்தல் தாமதமடைந்தமைக்கு கால்நடைவள மருத்துவர்கள் தொழில்சார் நடவடிக்கைகள் மற்றும் அந்த ஆண்டில் இரண்டு தேர்தல்கள் நடாத்தப்பட்டமையும் காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும் இந்த ஆண்டிற்காக நிதியேற்பாடு வழங்கி ஏனைய மாவட்டங்களின் செயற்திட்டங்கள் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டத்தில் 2024 ஆம் ஆண்டிற்காக ஒட்டுமொத்த பௌதீக செயல் முன்னேற்றம் 88 சதவீதம் நிதிசார் செயல் முன்னேற்றம் 86 சதவீதம் ஆகும். | |

## 4.4 கால தாமதத்தின் பின்னர் வேலை ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| அமைச்சின் கால்நடைப் பிரிவு மத்திய கால கால்நடை வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை கால்நடை மருத்து அலுவலக கட்டிடத்தை நிர்மானிக்கும் நடவடிக்கைகளுக்காக 2022 நிதி ஆண்டின் போது ஆரம்ப முற்பணம் மற்றும் முதலாவது பட்டியலுக்குரிய ரூபா 6.82 மில்லியன் செலுத்தப்பட்டிருக்கும் போது கட்டிடம் மூலப்பொருள் பற்றாக்குறை மற்றும் விலை உயர்வடைந்து சென்றதன் காரணமாக ஒப்பந்தகாரரின் கோரிக்கையின் அடிப்படையில் முறையற்ற வகையில் நிர்மாண ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் அந்த கட்டித்தை நிர்மாணிக்கும் | 2021.12.26 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 2021 ஆம் ஆண்டிற்காக தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டின் போது ரூபா 6.82 மில்லியன் அதாவது 32 சதவீத நிதியேற்பாடு கைப்பற்றப்பட்டிருந்தது. முன்னாள் காணப்பட்ட கட்டிட மூலப் பொருள் நிலுவை மற்றும் அதிகரித்த விலைகளின் காரணமாக ஒப்பந்தகாரர்களின் கோரிக்கையின் அடிப்படையில் 2022.04.26 ஆந் திகதி தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் 03III பிரிவுகளின் மூலம் | செயற்திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் மட்டத்தில் அடைந்து கொள்ள வேண்டியிருந்ததுடன் பரீட்சிப்பினை மேற்கொண்டு நிதியேற்பாடு விடுவிக்கப்படல் வேண்டும். |

இரண்டாவது கட்டமாக 2024 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கி அதற்காக ரூபா 58.25 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் எதிர்பார்க்கப்பட்ட நிதிசார் செயல் முன்னேற்றம் மற்றும் பௌதீக செயல் முன்னேற்றம் 100 சதவீதமாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரையில் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டத்திற்காக ஒப்பந்தகாரருக்கு ரூபா 10.7 மில்லியன் முற்பணம் செலுத்தப்பட்டதுடன் பௌதீக செயல் முன்னேற்றம் 03 சதவீதம் ஆன மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

அறிமுகப்படுத்தப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் இரு தரப்பினரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நிர்மாண ஒப்பந்தம் முறையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அமைச்சு செயலாளரின் ஆலோசனையின் அடிப்படையில் புதிய மதிப்பீடு ஒன்று 2023 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டு 2023 ஆம் ஆண்டிற்கு உரிய I கட்டத்திற்காக ரூபா 25 மில்லியனும், 2024 ஆம் ஆண்டிற்காக II கட்டத்திற்காக ரூபா 27.978 மில்லியனும் ஆக மதிப்பீடு செய்யப்பட்டு ரூபா 25 மில்லியன் பாதீட்டு நிதியேற்பாட்டில் குறைக்குமாறு அரச செலவின மீளாய்வுக் குழு (PERC) பரிந்துரையின் அடிப்படையில் இந்த நிர்மாண நடவடிக்கைகள் 2023 ஆம் ஆண்டிற்குரியதாக தற்காலிகமாகக் கைவிடப்பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டின் போது ரூபா 60 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டு வடமாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் மூலம் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு திருத்தப்பட்ட மதிப்பீடு ஒன்று விவசாய அமைச்சின் பணிப்பாளரால் (பொறியியலாளர்) வழங்கப்பட்ட மாதிரிப் படிவத்தின் பிரகாரம் வடமத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பியிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்ட உடன் இந்த நிர்மாணங்களை ஆரம்பிப்பதற்கு உரிய 2024.08.24 ஆந் திகதி பத்திரிகை அறிவித்தல் மூலம் கேள்வி கோரி வட மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் மற்றும் கோணேஸ் கன்ஸ்ரக்ஷன் (Kones Construction) இடையே உடன்படிக்கையில் 2024.10.29 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தது. வற் உடன் ஒப்பந்தத் தொகை

ரூபா 36,726,022 ஆகும். ஆரம்ப முற்பணமாக (வற் உடன்) ரூபா 10,737,696 தொகை வடமாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் 2024.11.18 ஆந் திகதி கடிதம் மூலம் கோரப்பட்டிருந்த போதும் ITMIS முறையில் காணப்படுகின்ற தொழில்நுட்ப வசதியீனத்தை மாற்றியமைப்பதற்காக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தில் இருந்து உரிய தொகை பெற்றுக் கொள்வதற்காக 2024.12.06 ஆந் திகதிய கடிதம் மூலம் வட மாகாண பிரதம செயலாளருக்கு ரூபா 10,750,000 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த முற்பணத் தொகை ஒப்பந்தகாரருக்கு 2024.12.18 ஆந் திகதி செலுத்தப்பட்ட போதும் 2024 ஆம் ஆண்டின் போது கவனத்தில் கொள்ளக் கூடிய மட்டத்தில் பௌதீக செயல் முன்னேற்றத்தைக் கைப்பற்றுவதற்கு போதியளவான காலம் காணப்படவில்லை. தற்போது வரையில் 20 சதவீத பௌதீக செயல் முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது. முதலாவது பட்டியலாக ரூபா 2,763,176 இற்கான சிட்டை ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 4.5 ஏனைய அவதானிப்புக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் கிராமிய பொருளாதாரப் பிரிவு மத்திய மாகாணத்தின் கிராமிய பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை கட்டி எழுப்புவதற்காக உத்தேசிக்கப்பட்ட வீட்டுத் தோட்ட ஆடுகளை வளர்க்கும் செயற்திட்டத்திற்கான ஆலோசனை – 2024 இல் சமர்ப்பித்துள்ள ஆலோசனைக் கோவையில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தும் போது பின்பற்றப்பட வேண்டிய குறிகாட்டிகளின் பிரகாரம் ஆடுகளை வழங்குவதற்கு முன் நலனாளிகளால் தமது தனிப்பட்ட செலவில் ஆட்டுக் கொட்டகைகள் அமைக்கப்படல் வேண்டும். எனினும் அந்த ஆட்டுக் கொட்டகைகளை நிர்மாணிக்கும் போது | பதிலளிக்கப்படவில்லை. | செயற்திட்டத்தை அமுல்படுத்தக் கூடிய மாதிரிகள் மற்றும் நியமங்கள் குறித்துரைத்த ரீதியில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கவனத்தில் கொள்ளக்கூடிய மாதிரி மற்றும் நியமங்கள் என்ன என்பது உரிய ஆலோசனைக் கோவையில் உள்ளக்கப்படவில்லை. மேலும் மாத்தளை மாவட்டத்திற்குரிய கலேவெல, நாவுல, வில்கமுவ பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் நுவரெலிய மாவட்டத்தில் நுவரெலிய பிரதேச செயலகப் பிரிவில் ஆட்டுக் கொட்டகைகளை உரிய பிரகாரம் நிர்மாணிக்காமையின் காரணமாக விண்ணப்பதாரர்கள் நிராகரிக்கப்பட்டதுடன் அவ்வாறு ஆட்டுக் கொட்டகை நிர்மாணித்தல் தொடர்பாக மாதிரி சமர்ப்பிக்காத விடத்து அவ்வாறு நிராகரிக்கப்பட்டமைக்கு தாக்கமளித்த காரணம் என்ன என்பது தொடர்பாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அமைச்சின் கால்நடைப் பிரிவின் இயலளவைக் கட்டியெழுப்பும் செயற்திட்டம் (Capacity Building) இன் கீழ் உத்தியோகத்தர்கள் மற்றும் இளைஞர் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் விவசாயிகளுக்காக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் மற்றும் கால்நடைக் கொள்கையினைத் தயாரித்தல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 2.06 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டதுடன் செயற்திட்டத்தின் கீழ் பயிற்சி அளிப்பதற்காக இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் எவ்வாறானது மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் அளவு தொடர்பாக வருடாந்த திட்டத்தில் குறிப்பிடப்படாமல் மீளாய்வாண்டில் இறுதி வரையில் செயற்திட்டத்தின் பௌதீக செயல் முன்னேற்றம் 26 சதவீதமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் அளவில் குறிப்பிடப்படாமல் பௌதீக செயல் முன்னேற்றத்தைக் கணிப்பிட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | இயலளவு அபிவிருத்தி செயற்திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் உத்தியோகத்தர்களுக்கும், விவசாயிகளுக்கும் பயிற்சி நிகழ்ச்சி திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டு கால்நடை வள கொள்கை அபிவிருத்தியும் இந்த செயற்திட்டத்திற்கு உரியதாகும். அதன் பிரகாரம் இந்த செயற்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மாகாணங்களில் எருமைப் பால் உற்பத்திக்காக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் வடமேல் மாகாணத்தில் 42 நலனாளிகளுக்கு இந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்ட முற்பணம் வழங்கப்படாமல் காணப்பட்ட போதும் ஏனைய தெரிவு செய்யப்பட்ட மாகாணத்தில் அவ்வாறு மேற்கொள்வதற்கு முடியாதிருந்ததாக வாய் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும் இந்த செயற்திட்டத்தின் கீழ் கால்நடை வள கொள்கை வழங்கலுக்கு உரிய கலந்துரையாடல் மற்றும் கள | செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கிடப்பட்ட நிகழ்சித் திட்டங்களின் அளவு வருடாந்த திட்டத்தில் காண்பித்து அதன் பிரகாரம் அவற்றை அமுல்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கைகளுக்காகவும் இந்த செயற்திட்டத்தின் கீழ் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்காக நிதியேற்பாடு ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே வருட இறுதியின் போது மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கால்நடை வள அபிவிருத்தி செயற்திட்ட மேற்பார்வை மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தர்கள் களத்திற்கு செல்வதற்கும் இந்த செயற்திட்ட நிதியேற்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | |

**4.6 உள்நாட்டு நிதியங்களில் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | Good Animal Husbandry Practice and Establishment of Modern Farm செயற்திட்டத்தின் கீழ் மேல் மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 05 நலனாளிகள் தொடர்பாக 2024.12.11 மற்றும் 2024.12.17 ஆந் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது அந்த நலனாளிகளுக்கு நிதி உதவி பெற்றுக் கொள்ளும் நிதி செயல் முன்னேற்றம் பூச்சியமாக இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் பின்னர் அவர்களிடம் விசாரணை செய்த போது 2025 பெப்ரவரி 03 ஆந் திகதி வரையிலும் உரிய செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்ட போதும் அதற்குரிய நிதி உதவி அவர்களுக்கு கிடைத்திருக்கவில்லை. ஒரு நலனாளிக்காக ரூபா 500,000 காசோலை ஒன்று மேல்மாகாணத்தின் பிரதம செயலாளரின் பெயருக்கு 2024.11.29 ஆந் திகதி விநியோகித்து அந்த மாகாண சபையில் அப் பெறுமதிக்காக மீண்டும் மேல் மாகாணப் பணிப்பாளரின் பெயருக்கு 2024.12.24 ஆந் திகதி காசோலை விநியோகித்து மாகாணப் பணிப்பாளரின் கணக்கில் 2024.12.27 ஆந் திகதி வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் நலனாளிக்கு பணம் கிடைத்திருக்கவில்லை. மேல் மாகாணத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதியேற்பாட்டின் பெறுமதி ரூபா 2.5 மில்லியன் ஆக இருந்ததுடன் அதில் சேமிப்பாக்கப்பட்ட நிதியேற்பாடு ரூபா 2 | நபர்களுக்கு செலுத்துவதற்காக பிரதேச செயலகத்திற்கு அனுப்பப்பட்ட காசோலைகள் மீண்டும் கணக்கு பிரிவிற்கு கிடைத்து 2025 சனவரி மாதம் உரிய கால்நடை மருத்துவ அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | நலனாளிகளுக்கு குறித்துரைத்த காலத்தில் நலன்கள் பெறுகின்ற வகையில் செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு செயற்பாடுகள் அமுல்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் மற்றும் செயற்திட்டத்தின் மேற்பார்வை, மதிப்பீடு மற்றும் நிர்வாக செலவினங்களுக்காக ரூபா 75,000 தொகையை உள்ளடக்கி ரூபா 2.075 மில்லியன் தொகை 2024.12.05 ஆந் திகதி மேல் மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. விநியோகிக்கப்பட்ட காசோலை மாகாணப் பணிப்பாளரின் கணக்கில் 2024.12.27 ஆந் திகதி வைப்புச் செய்யப்பட்டதுடன் நலனாளிகளுக்கு உரித்தாக வேண்டிய பணத்திற்காக நலனாளிகளின் பெயருக்கு காசோலை விநியோகிக்காமல் மாகாணப் பணிப்பாளரின் கணக்கில் ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | Quality Improvement of Milk and Milk Products செயற்திட்டத்தின் கீழ் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் 09 நலனாளிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 2,888,036 ஆகும். களப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட திகதி வரையிலும் அந்த நலனாளிகளுக்கு நிதி உதவி பெற்றுக் கொள்ளும் நிதிசார் செயல் முன்னேற்றம் பூச்சியமாக இருந்தது. பின்னர் 2025 பெப்ரவரி 05 ஆந் திகதி அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பின்தொடர் நடவடிக்கைகளின் போது செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த திகதி வரையிலும் 08 நலனாளிகளுக்கு நிதி உதவி வழங்கப்பட்டிருக்கவில்லை. 04 நலனாளிகளுக்கு ரூபா 1,209,190 பெறுமதியான காசோலை அமைச்சினால் மேல் மாகாண சபையின் பிரதம செயலாளரின் பெயருக்கு விநியோகித்து அப் பெறுமதிக்கு உரிய மேல் மாகாணப் பணிப்பாளரின் பெயரில் 2025.12.31 ஆந் திகதிக்கு முன் விநியோகிக்கப்பட்ட காசோலை மூலம் உரிய பணம் மாகாணப் பணிப்பாளரின் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டு 2025 பெப்ரவரி 05 ஆந் திகதி வரையிலும் அந்தப் பணம் உரிய நலனாளிகளுக்கு செலுத்தப்படாமல் ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலம் மேல் மாகாணப் பணிப்பாளரின் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. தொழில் நுட்ப உத்தியோகத்தரால் 2024.12.04 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட ரூபா 500,000 செலவினத்தை உள்ளடக்கிய உறுதிச்சீட்டு அமைச்சுக்கு 2025.01.01 ஆந் திகதி கிடைத்து 2024 ஆம் ஆண்டில் கடப்பாடு ஒன்றாகக் காண்பித்து அப் பெறுமதிக்கு உரிய 2025.01.27 ஆந் திகதி மேல் மாகாண சபையின் பிரதம | மேற்கூறப்பட்ட பதிலே உரியதாகும். | நலனாளிகளுக்கு குறித்துரைத்த காலத்தில் நலன்கள் கிடைக்கின்ற வகையில் செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு செயற்பாடுகள் அமுல்படுத்தப்படல் வேண்டும். |

செயலாளரின் பெயருக்கு காசோலை விநியோகிக்கப்பட்டிருந்தது. மேலும் முறையே ரூபா 253,846 மற்றும் ரூபா 100,000 ஒதுக்கப்பட்டிருந்த நலனாளிகள் இருவருக்காக உரிய பணம் விடுவிக்கப்படாது இருந்ததுடன் அதற்கு காரணமாக குறித்துரைத்த விடயங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அதன் பிரகாரம் உப செயற்திட்டங்களில் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட செயல்திட்டத்தின் நிதிசார் செயல் முன்னேற்றம் 11.25 சதவீதம் ஆன ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

### 4.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் பாவனையில் காணப்படாதிருந்த போதும் CIGAS கணனி முறைமையில் உள்ளடக்கப்பட்ட பெறுமதி ரூபா 116,711,920 ஆன 12 வாகனங்கள் தொடர்பாக 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய இலக்கம் 02/2017 என்ற திறைசேரி பிரதி செயலாளரின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வாகனம் தொடர்பான காரணங்களைக் கண்டறிந்து தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும். | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சின் பயன்பாட்டில் காணப்படாத வாகனங்கள் தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அமைச்சின் விவசாய, கிராமிய பொருளாதார, கால்நடை வள மற்றும் உரப் பிரிவிற்குரிய பெறுமதி ரூபா 80,000,000 ஆன 06 வாகனங்கள் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஓட்ட நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படாமல் பயனற்றுக் காணப்பட்டது. | இந்த வாகனங்கள் தொடர்பான காரணங்களைக் கண்டறிந்து தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும். | வளங்களை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துதல் வேண்டும். |
| (இ) | பல வருட காலம் முதல் அமைச்சின் JK-0194 மற்றும் JK-0188 ஆம் இலக்கமுள்ள 02 பேருந்து வண்டிகள் அலுவலக போக்குவரத்துத் திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட போதும் அதில் பிரயாணம் செய்த இரண்டு உத்தியோகத்தர்களினால் அதில் பிரயாணம் மேற்கொண்ட உத்தியோகத்தரிடம் இருந்து பல வருட காலம் முதல் சேகரிக்கப்பட்ட தொகைகளில் உரிய பேருந்துகளின் எரிபொருள் செலவினம் தீர்க்கப்பட்டதன் பின்னர் 2025 யூன் 30 ஆந் திகதி வரையில் ரூபா 205,840 மற்றும் ரூபா 257,111 தொகை அந்த உத்தியோகத்தரின் கையில் சேமிப்பாகக் காணப்பட்டது. அதனை அரசாங்க சொத்தொன்றாக பயன்படுத்துவதன் மூலம் | பதிலளிக்கப்படவில்லை. | அரசாங்க ஆதனங்களை பயன்படுத்தி கிடைக்கின்ற சகல வருமானங்கள் தொடர்பாகவும் முறையான பதிவேட்டை பேணிச் சென்று அந்த பணம் அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்பட வேண்டும். |

உழைக்கப்படுகின்ற பணம் கணக்கீட்டு உத்தியோகத்தர், வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது அவரால் அதிகாரம் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் கட்டுப்பாட்டிற்குப் புறம்பாக பயன்படுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 4.8 நட்டம் மற்றும் கைவிடல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 09 வாகனங்களுக்குரிய பெறுமதி ரூபா 5,946,308 ஆன சம்பவங்களின் நட்டம் மற்றும் கைவிடல்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை. | விவசாய பிரிவின் நட்டம் மற்றும் கைவிடல் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட சம்பவங்கள் புத்தகங்களில் இருந்து பதிவளிக்கப்பட்டமையால் அந்த சம்பவங்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை. உரிய சம்பவங்களை பதிவளித்தல் தொடர்பான தகவல்கள் தவறு ஒன்றினால் நட்டம் மற்றும் கைவிடல் பதிவேட்டில் உள்ளடக்கப்படாது இருந்ததுடன் அந்த தகவல்கள் நட்டம் மற்றும் கைவிடல் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நட்டத்தின் பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி வரையில் நட்டத்தை அறவிடுவதில் தாமதம் ஏற்பட்டமை அல்லது அறவிடுவதற்கு தவறிமையின் அடிப்படையில் 38 சம்பவங்களுக்குரிய முன்கொண்டு செல்லப்படுகின்ற ரூபா 21,049,464 நட்டத்திற்காக நிதிப்பிரமாணம் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 109 இன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படாத 04 வாகனங்களின் நட்ட இழப்புப் பதிவேட்டில் இருந்து அகற்றுவதற்காக கணக்கு பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. 18 வாகனங்களுக்கு உரிய நிதிப்பிரமாணம் 104(4) அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் உரிய படிவத்தின் பிரகாரம் தயாரித்து செயலாளரின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்கும், 03 வாகனங்களின் விபத்து தொடர்பாக நட்டங்களை அறவிடுவதற்காக அமைச்சின் சட்டப் பிரிவு ஊடாக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இலக்கம் 251-3639 என்ற வாகனத்தின் சாரதியிடம் இருந்து அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. இலக்கம் 252-3527, HB-5572, 253-3919, GT-2015, KS-4826 என்ற 06 வாகனங்களின் நட்டங்களுக்குரிய நிதிப்பிரமாணம் 104 | நிதிப்பிரமாணம் 109 இன் பிரகாரம் நட்ட மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கோவை போக்குவரத்துப் பிரிவில் காணப்படவில்லை. 06 வாகனங்களுக்கு உரிய நிதிப்பிரமாணம் 104(1) மற்றும் 104(4) பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அந்த பரிசோதனை நடவடிக்கைகள் முடிவடைந்த உடன் அது தொடர்பாகவும் நிதிப்பிரமாணம் 109 இன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | 2021 மார்ச் 21 ஆந் திகதி விபத்திற்கு உட்பட்டு 03 வருடங்களும் 09 மாதங்களும் கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஓட்டத்திற்கு பொருத்தமான நிலைமைக்கு கொண்டுவரப்படாது இருந்த KW-8202 வாகனத்தின் நட்டம் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | KW-8202 என்ற வாகனத்தின் விபத்து தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(4) இன் கீழ் நட்டம் தொடர்பான இறுதி அறிக்கை பெற்றுக் கொள்வதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்தக் குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர் நட்டத் தொகையை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | நட்டத்தின் பெறுமதிகளை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2021 யூன் 21 ஆந் திகதி தொழில்நுட்பக் கோளாறுக்கு உட்பட்டு 03 வருடங்களும் 06 மாதங்களையும் விஞ்சியிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஓட்டத்திற்குப் பொருத்தமான நிலைமைக்கு கொண்டுவரப்படாத கிராமிய பொருளாதார பிரிவிற்குரிய CAV-5064 என்ற வாகனத்தின் நட்டம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | CAV-5064 ஜீப் வண்டியின் தொழில்நுட்பக் கோளாறுக்கு உரிய நிதிப்பிரமாணம் 104(4) இறுதி அறிக்கை தயாரித்து அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. அந்த அறிக்கை கிடைத்த பின்னர் இந்த வாகனத்தின் நட்டத் தொகையை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நட்டத்தின் பெறுமதிகளை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | முன்னைய ஆண்டுகளில் ஏற்பட்ட இரண்டு விபத்துக்களுக்கு உரிய மற்றும் பொருட்களுக்கான ஒரு விபத்துக்கு உரிய கூட்டுப் பெறுமதி ரூபா 377,911 ஆன நட்டத்தை அறவிடுவதற்கு தவறியமையால் மீளாய்வாண்டின் போது புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவர் காணப்படாமையினால் அறவிடல் மேற்கொள்ள முடியாதிருந்தமையால் நிதிப்பிரமாணம் 109 இன் கீழ் புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.9 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 155 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் நிதிப்பிரமாணம் 452(1) இல் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு ஐயவினாப் பதிவேடு குறித்துரைத்த காலத்தின் பின்னர் பரீட்சிக்கப்பட்டு கிடைக்கப்பெற்ற கணக்காய்வு ஐயவினாக்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளைச் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் அந்த ஐயவினாக்களுக்கு உடனடியாக பதிலளிக்க வேண்டியிருந்த போதிலும் அமைச்சுக்கு விநியோகிக்கப்பட்ட 13 கணக்காய்வு ஐயவினாக்களுக்காக இந்த அறிக்கைத் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த கணக்காய்வு ஐயவினாக்களுக்காக பதில் எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும். | கணக்காய்வு ஐயவினாக்களுக்காக பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.10 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஏப்ரல் 08 ஆம் திகதி முதல் 2021 ஏப்ரல் 07 ஆந் திகதி வரை அதாவது 05 வருட கால எல்லைக்காக விவசாய அமைச்சிற்காக தனியார் கம்பனியுடன் ஏற்படுத்தப்பட்ட இலக்கம் 2178 என்ற வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் ஸ்ரீ ஜயவர்தனபுரக் கோட்டை, இலக்கம் 288 இல் அமைந்துள்ள DPJ TOWER என்ற பெயருடைய கட்டிடத்தின் பகுதியை வாடகையாளருக்கு மீண்டும் 2020 சனவரி 31 ஆந் திகதி கையளிக்கப்பட்ட போதும் அமைச்சினால் அந்த வாடகையாளருக்கு செலுத்தப்பட்ட ரூபா 63 மில்லியன் மீள செலுத்த வேண்டிய பாதுகாப்பு வைப்பு இதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கை நிபந்தனை இலக்கம் 11 இன் பிரகாரம் உடன்படிக்கை முடிவடைந்து வாடகை ஆதனங்கள் கையேற்றல் ஒரு மாத காலத்திற்குள் வாடகையாளரிடம் இருந்து செலுத்த வேண்டிய பாதுகாப்பு வைப்பை வாடகைக்கு வழங்கியவருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதன் பிரகாரம் வாடகையாளர் தரப்பினரால் சட்ட விரோதமாக இந்த பாதுகாப்பு வைப்பை நிறுத்தி வைத்தல் இதுவரையில் விஞ்சியிருந்த காலம் 04 வருடங்கள் ஆகும். | வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் 05 வருடங்களுக்காக கட்டிடம் வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்கு உடன்படிக்கை செய்து உரிய உடன்படிக்கையின் பிரகாரம் ஆதனத்தின் தீர்த்து வைத்தல் உரித்தை மீண்டும் கையேற்ற பின்னர் வைப்புத் தொகையான ரூபா 63 மில்லியன் வைப்பு இணங்கப்பட்ட பிரகாரம் அந்த நிறுவனத்திற்கு செலுத்தப்பட வில்லை. வைப்புத் தொகையை அறவிடுவதற்காக சட்டமா அதிபர் திணைக்களம் DPJ நிறுவனத்திற்கு நடுக்கட்டல் அனுப்பப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக 2022.11.21 ஆந் திகதிய கடிதம் மூலம் அவருக்கு 300 இலட்சம் தொகை செலுத்துவதற்கு இணங்கப்பட்டிருந்தது. அந்த இணங்கிய 300 இலட்சம் தொகையை அறவிடுவதற்கும் மிகுதித் தொகைக்கு வழக்கு தொடர்வதற்கும் உள்ள இயலுமை தொடர்பாக அறியும் வகையில் 2023.05.09 ஆந் திகதி கடிதம் ஒன்று சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது. விவசாய அமைச்சினால் மேற்கூறப்பட்ட கொடுப்பனவுக்கு இணங்கிய ரூபா 300 இலட்சம் தொகை செலுத்துமாறு கோரி DPJ நிறுவனத்திற்கு 2024.12.17 ஆந் | வைப்புத் தொகை அறவிடப்படல் வேண்டும். |

திகதி அனுப்பப்பட்ட கடிதத்திற்குப் பதிலாக ரூபா 300 இலட்சம் தொகை அந்த கால எல்லையின் போது செலுத்துவதற்கு முடியாதிருந்தமை தொடர்பாகக் குறிப்பிட்டு அது தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று கோரி DPJ நிறுவனத்தின் தலைவர் திரு. டீ.யூ. ஜயசிங்க அவரின் கையொப்பத்துடன் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்ட 2024.12.30 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கும் அறிவித்ததுடன் 2025.03.03 ஆந் திகதி ஆரம்ப வைப்புத் தொகையை மீண்டும் அறவிடுதல் தொடர்பாக விசேட கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்பட்டது. அதன் போது ரூபா 63 மில்லியன் ஆன ஒட்டுமொத்த பெறுமதியில் ரூபா 300 இலட்சம் தொகை வருடத்தின் போது செலுத்துவதற்கு முடியாதிருந்ததாக DPJ நிறுவனத் தரப்பினர் குறிப்பிட்டதுடன் அது தொடர்பாக செலுத்தும் திட்டம் ஒன்று சமர்ப்பிப்பதற்காக 2025.03.07 வரையான காலம் வழங்குமாறு கோரப்பட்ட போதும், செலுத்தும் திட்ட கால அட்டவணை இரண்டு வாரங்களுக்கு அண்மித்த காலம் கடந்ததன் பின்னரும் சமர்ப்பிக்காமை மற்றும் அது தொடர்பாக DPJ நிறுவனத்தின் எந்த ஒரு பதிலும் கிடைக்காமையின் அடிப்படையில் தொகையை மீண்டும் அறவிடுதல் தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கை எடுக்குமாறு கோரி கௌரவ சட்டமா அதிபருக்கு 2025.04.02 ஆந் திகதி கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் பிரதான பதவியான சிரேஸ்ட உதவிச் செயலாளர், பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர், உள்ளகக் கணக்காய்வாளர், உதவிச் செயலாளர், கணக்காளர் போன்ற பதவிகளை உள்ளடக்கி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் பெருந்தோட்டக் கைத்தொழில் | 2024.12.31 இல் உள்ளவாறு விவசாயப் பிரிவில் சிரேஸ்ட நிலையில் 22 வெற்றிடங்கள் காணப்பட்டது. மேலும் வெற்றிடங்கள் காணப்படுகின்ற பதவிகளை நிரப்புதல் தொடர்பாக நிர்வாக அதிகாரத் தரப்பினருக்கு | தற்போதய தேவைக்கு ஈடுகொடுக்கும் வகையில் பதவியணியினர் எண்ணிக்கையை திருத்துவதற்கும், |

பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 833 ஆக இருந்ததுடன் அதில் 62 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் விவசாயப் பிரிவில் 143 பதவிகள், கால் நடை வளப் பிரிவில் 26 பதவிகள் என்பவற்றில் வெற்றிடங்கள் காணப்பட்டது. காணப்படுகின்ற வெற்றிடங்களை மீண்டும் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் பொருத்தமான பிரகாரம் பதவிகளை நிரப்புவதற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

அறிவிக்கப்பட்டுள்ளது.
பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சுக்காக தேவையான பொருத்தமான பதவியணியினர் முன்மொழியப்பட்டுள்ளது.
முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 2025.01.15 ஆம் திகதிய DMS/CM/24/23 ஆம் இலக்கக் கடிதத்தில் பெருந்தோட்டப் பிரிவிற்கும், சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சுக்கும் தனித்தனியாக பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்படுகின்ற வெற்றிடங்களுக்காக தேவையான நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்து அரச நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.
கால்நடை வளப் பிரிவில் சிரேஸ்ட நிலையில் வெற்றிடங்கள் காணப்படுகின்ற மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) மற்றும் பிரதான கணக்காளர் பதவிகளில் முழுநேர பதிற்கடமை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டதுடன் இரண்டாம் நிலையிலும், ஆரம்ப நிலையிலும் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்காக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தேவையான பதவிகளுக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.